॥ श्रीः ॥
॥ श्रीमते लक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः ॥

ஸ்ரீ நரஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 79 | ஸஞ்சிகை 1&2 | ஸார்வரி ஸ்ரீ | சித்திரை-வைகாசி மீ APRIL-MAY 2020 | ₹ 30

ஸ்ரீ நம்மாழ்வார்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அஹோபில மடம் ஆண்டு 623

ஸம்புடம் 79 | ஸஞ்சிகை 1&2 | ஸார்வரி ஸ்ரீ | சித்திரை - வைகாசி மீ | April & May 2020

ஸ்ரீமதாதிவண் ஶடகோப ஸ்வாமி
ஸ்தாபகர் - ஸ்ரீ அஹோபிலமடம்

Editor
Dr. M.V. Anantha padmanabhachariar

Publisher : Sri J.S. Vasan
Annual Subscription : Rs.300/-
Overseas : US 60 $ per annum
Life Subscription : Rs. 15,000/-

Office Address:
Sri Nrisimhapriya Trust
No. 30, Venkatesa Agraharam,
Mylapore, Chennai-600 004.
Tel : 2461 1540, 2461 4402
E-mail:srinarasimhapriya@gmail.com

ஸ்ரீ அஹோபில மடம் 42ம் பட்டம்
இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கர்
(நிறுவனர் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா-தமிழ்)

अहोबिले गारुडशैलमध्ये कृपावशात् कल्पितसन्निधानम् |
लक्ष्म्या समालिङ्गितवामभागं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ||

श्री नृसिंहप्रिया श्रीमन्नृसिंहकरुणोत्थिता |
श्री नृसिंहकटाक्षेण जीयादाचन्द्रतारकम् ||
नृसिंहपदभक्तानां गेहे गेहे सदा वसेत् |
श्री नृसिंहप्रिया ह्येषा नृसिंहप्रियया सह ||

ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையினால் உண்டாயிருக்கும் இந்த ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா பத்ரிகை அந்த ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும், ஸங்கல்பத்தாலும் சந்திரன் நக்ஷத்திரங்கள் உள்ளவரையிள் அவை போலவே சிறப்புடன் வாழ்க கடவது, நம் ஸ்ரீந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள் தோறும் இந்த ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை. ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.

ஸ்ரீ அஹோபில மடம்
46ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹம்

ஸ்ரீ வைஷ்ணவ உலகில் ஸத்ஸம்ப்ரதாயத் தொண்டினை 75 வருடங்களாக இடைவிடாமல் செய்துவரும் முன்மையான ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா என்னும் இப்பத்ரிகை, நம் சிஷ்யர்கள் மற்றும் அயிமாநிகளின் பரிபூர்ண ஒத்துழைப்புடனும், உத்ஸாஹத்துடனும், உய்யும் உபாயத்தை உரைத்துரைக்கும் வித்வத்வரேண்யர்களின் உபதேஶத்தினாலும் மேன்மேலும் வளர்ந்த நம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ பக்தர்களின் க்ருஹங்களை அலங்கரிக்க வேண்டுமென நம் ஆராத்ய தேவதையான ஸ்ரீமாலோலனைப் ப்ரார்த்திக்கிறோம்.

உள்ளே

அருள்மொழிகள்	5
பஞ்சாங்க ஸங்க்ரஹம்	8
ஸம்பாதகரின் குறிப்புகள்	10
ஸுகுண ஸுசீலஸம்வாதம்	13
விடலரிய அருள் வரதர் அடியமே	20
பக்தாம்ருதம்	24
பூரணன் தந்த பூரிப்பு	29
யமனுக்கு யமன்	31
கானகத்தில் பெற்ற கனி விருந்து	34
மார்க்கண்டேயரின் சரிதம்	39
தனிமையில் இனிமை காணலாம்	42
இந்த மாதம் உங்கள் நிலை	45

சந்தாதாரர்கள் இண்டெர்நெட் பேங்கிங் மூலமாகவே
தங்களின் சந்தாக்களைச் செலுத்தலாம்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிற்கு சந்தா தொகையைப் புதுப்பிக்க விரும்புவோர் கவனத்திற்கு

(1) பணம் கட்டிய தொகை, (2) நிலுவை காலம், (3) தேதி, (4) பெயர், (5) அனுப்புனர் பெயர், (6) எந்த வங்கியின் மூலம் பணம் அனுப்பப்பட்டது, (7) Transaction Ref. No., மற்றும் (8) சந்தா எண், (9) முகவரி (10) தொலைபேசி எண் - ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம். அநேகம் பேர் மேற்கூறிய விபரங்களை அனுப்பாமல் பணத்தை அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். SMS மூலம் தகவல்களை அனுப்பவேண்டாம். அதே போன்று PayTM/Other Wallets போன்ற வஸதிகளைப் பயன்படுத்தி பணத்தை அனுப்புவதை தவிர்க்கவும். புதிதாக சந்தாதராக சேர விரும்புவோரும் மேற்கூறிய வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் சந்தா எண்ணுக்குப் பதில் புதிய உறுப்பினர் என்று எழுதவம். பணம் வந்து சேர்ந்ததற்கான ரசீது உடனடியாக அனுப்பிவைக்கபடும். இவ்வசதியை கல்யாண விளம்பரங்களுக்குப் பயன்படுத்த முடியாது. சரியான தகவல் பரிமாற்றம் இருந்தாலொழிய எங்களால் கணக்குகளை சரிபார்க்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும். தெரிவிக்க வேண்டிய முகவரி E.mail : snpolr@gmail.com

Name of the Account : Sri Nrisimha Priya Trust / Name of the Bank : Canara Bank
Name of the Branch : St. Mary's Road, Chennai - 600018.
Type of A/C : Savings / Account No : 1287 - 101 - 014579 / IFSC Code : CNRB0001287

ஸ்ரீமதழகியசிங்கரின் அருள்மொழிகள்

அச்யுத, அநந்த, கோவிந்த
நாம உச்சாரண பேஷஜாத் |
நஶ்யந்தி ஸகலா ரோகா:
ஸத்யம், ஸத்யம் வதாம்யஹம் ||

[உலகில் தற்போது நேர்ந்துள்ள கொடிய அபாயமான கொரொனா எனும் பயங்கர வ்யாதியிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள ஸ்ரீமாலோலனை ப்ரார்த்திக்கிறோம். இதன் பொருட்டு நமது மாலோலனுக்கு நிதமும் ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்யப்படுகிறது. "அச்யுத, அநந்த கோவிந்த" எனும் இந்த ச்லோகத்தை தினந்தோறும் பெருமாள் சன்னிதியில் பதினாறு முறை ஆஸ்தீகர்கள் அனைவரும் பாராயணம் செய்யவும். வெகு சீக்கிரம் மாலோலம் க்ருபையால் உலகில் ரோகபயம் நீங்கும்]

- ஸ்ரீமடகோபஸ்ரீ:

அஹோபிலம் ப்ரஹ்மோத்ஸவம்

நாச்சியார் திருக்கோலம்

அஹோபிலம் ப்ரஹ்மோத்ஸவம் குதிரை நம்பிரானில் ஸ்ரீப்ரஹ்லாத வரதன்.

அஹோபிலம் ப்ரஹ்மோத்ஸவம்

அஹோபிலம் தெப்பத்திருவிழா

ப்ரஹ்மோத்ஸவம் - அவப்ருத ஸ்நாந ஸமயம்

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸார்வரி ஸ்ரீ வைகாசி (வ்ருஷப) மீ உத்தராயணம் வஸந்தருது

(மே - ஜூன் 2020)

ஸ்ரீ உ.வே. பழவேரி வில்லிவலம் லக்ஷ்மீநரசிம்ஹாசார்யார் ஸ்வாமி
ஆராதகர் ஆஸ்தான வித்வான் ஸ்ரீமடம்

May	வைகாசி		
14	1	வியாழன்	ஸப்தமி 12-59 ச்ரவணம் 11-04 சூன்ய திதி விஷ்ணு பதி வ்ருஷப ரவி 28-52
15	2	வெள்ளி	அஷ்டமி 15-30 அவிட்டம் 15-10 சூன்ய திதி
16	3	சனி	நவமி 19-03 தசமி திதி சதயம் 20-16
17	4	ஞாயிறு	தசமி 23-22 அதிதி பூரட்டாதி 26-07
18	5	திங்கள்	ஏகாதசி திதி 28-14 உத்திரட்டாதி 38-28
19	6	செவ்வாய்	த்வாதசி திதி 33-13 ரேவதி 38-54
20	7	புதன்	த்ரயோதசி திதி 37-52 அஸ்விநீ 45-00
21	8	வியாழன்	சதுர்தசி திதி 41-56 பரணி 50-31
22	9	வெள்ளி	அமாவாஸ்யை திதி 45-01 க்ருத்திகை 55-01 ஸர்வ அமாவாஸ்யை
23	10	சனி	சுக்ல ப்ரதமை திதி 47-01 ரோஹிணீ 58-30
24	11	ஞாயிறு	த்விதீயை திதி 47-40 ம்ருகசீர்ஷம் 60-00
25	12	திங்கள்	த்ருதீயை திதி 47-02 ம்ருகசீர்ஷம் 00-37
26	13	செவ்வாய்	சதுர்த்தி திதி 45-14 திருவாதிரை 01-30
27	14	புதன்	பஞ்சமி திதி 42-15 புனர்வஸு 01-14 புஷ்யம் 58-36
28	15	வியாழன்	ஷஷ்டி திதி 38-22 ஆயில்யம் 57-37 அக்னி நக்ஷத்ர நிவ்ருத்தி
29	16	வெள்ளி	ஸப்தமி திதி 33-38 மகம் 54-32
30	17	சனி	அஷ்டமி திதி 28-18 பூரம் 50-59
31	18	ஞாயிறு	நவமி திதி 28-34 நவமி-தசமி திதி த்வயம் உத்திரம் 47-04 ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ திவ்ய பாதுக ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகன் வார்ஷிக ஆராதனம்
June 2020			
1	19	திங்கள்	தசமி திதி 16-33 ஏகாதசி திதி ஹஸ்தம் 42-59
2	20	செவ்வாய்	ஏகாதசி திதி 10-28 த்வாதசி திதி சித்ரா 38-55 ஸர்வஏகாதசி
3	21	புதன்	த்வாதசி திதி 04-27 த்ரயோதசி திதி 54-21 ஸ்வாதீ 35-07
4	22	வியாழன்	சதுர்தசி திதி 53-44 விசாகம் 31-47 ப்ரதோஷம் ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
5	23	வெள்ளி	பௌர்ணமி திதி 49-17 அனுஷம் 28-01
6	24	சனி	க்ருஷ்ண ப்ரதமை திதி 45-45 கேட்டை 27-02
7	25	ஞாயிறு	த்விதீயை திதி 43-15 மூலம் 26-05
8	26	திங்கள்	த்ருதீயை திதி 41-53 பூராடம் 26-13

9	27	செவ்வாய்	சதுர்த்தி திதி 41-47 உத்திராடம் 27-34
10	28	புத	பஞ்சமி திதி 42-58 ஶ்ரவணம் 30-11
11	29	வியா	சஷ்டி திதி 45-20 அவிட்டம் 33-59
12	30	வெள்	ஸப்தமி திதி 48-46 சதயம் 38-50
13	31	சனி	அஷ்டமி திதி 53-02 பூரட்டாதி 44-34
14	32	ஞாயி	நவமி திதி 57-46 உத்திரட்டாதி 50-48 மிதுன ரவி 53-04

ஸங்கல்பம்

1) வ்ருஷப ஸங்க்ரமண தர்ப்பணம் - ஸார்வரி ஜ்ரு வைகாசி மீ 1ந் தேதி (14.05.2020) வியாழக்கிழமை ஸப்தமி 12-59 (11.12 காலை) ச்ரவணம் 11.04 (10.26 காலை) ப்ராம்ஹம் 56-51 பாலவம் 44-15 விஷ்ணுபதி வ்ருஷப ரவி 28.52 (மாலை 5.34 மணி)

1) ஸார்வரி நாம ஸம்வத்ஸரே 2) உத்தராயணே 3) வஸந்த ருதௌ 4) மேஷ மாஸே / வ்ருஷப மாஸே 5)க்ருஷ்ண பக்ஷே 6) ஸப்தம்யாம் / அஷ்டம்யாம் புண்யதிதௌ 7) குருவாஸர 8) ச்ரவண / ச்ரவிஷ்டா நக்ஷத்ர யுக்தாயாம் 9) ப்ராம்ஹ யோக 10) பாலவ கரண ஏவம் குண விசிஷ்டாயம் அஸ்யாம் 11) ஸப்தம் யாம் / அஷ்டம்யாம் புண்யதிதௌ 12) வ்ருஷப ஸங்க்ரமண ஸ்ராத்த தர்ப்பணம் கரிஷ்யே

2) அமாவாஸ்யை தர்ப்பணம் - ஸார்வரி ஜ்ரு வைகாசி மீ 9ந் தேதி (22.05.2020) வெள்ளிக்கிழமை அமாவாஸ்யை 45.01 க்ருத்திகை 55-01 சோபநம் 03-51 சதுஷ்பாதம் 13.28 (காலை 11.35 மணி) / நாகவம் 45-01 சர்வ அமாவாஸ்யை

1) ஸார்வரி நாம ஸம்வத்ஸரே 2) உத்தராயணே 3) வஸந்த ருதௌ 4)வ்ருஷப மாஸே 5)க்ருஷ்ண பக்ஷே 6) அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 7) ப்ருகு வாஸர 8) கிருத்திகா நக்ஷத்திர யுக்தாயாம் 9) சோபந யோக 10) சதுஷ்பாத / நாகவ காண நவம் குண விஸிஷ்டாயாம் அஸ்யாம் 11) அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ 12) தர்ச ஸ்ராத்த பிரதிநிதி தில தர்ப்பணம் கரிஷ்யே

குறிப்பு : - விஷ்ணுபதி புண்யகாலம் -

ஸார்வரி ஜ்ரு வைகாசி மாதத்திய ஸ்ரீ மதழகியசிங்கர்கள் திரு நக்ஷத்ரங்கள்

7 ம்	பட்டம்	விசாகம்	வைகாசி 22 (04.06.2020) - வியாழக்கிழமை
10 ம்	பட்டம்	விசாகம்	வைகாசி 22 (04.06.2020) - வியாழக்கிழமை
27ம்	பட்டம்	அவிட்டம்	வைகாசி 29 (11.06.2020) - வியாழக்கிழமை
35ம்	பட்டம்	கேட்டை	வைகாசி 24 (06.06.2020) - சனிக்கிழமை
39ம்	பட்டம்	பரணி	வைகாசி 8 (21.05.2020) - வியாழக்கிழமை

ஸம்பாதகரின் குறிப்புகள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां संजीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान् नमो भगवते पुरुषाय तुभ्यम् ॥

ஸர்வே ஜநா: ஸுகிநோபவந்து:-

ஸ்ரியபதியான ஸர்வேஸ்வரனின் அபரிமிதமான லீலாவிநோதங்களின் பரிவாஹமாக நமது ப்ரியா தற்போது முதன்முதலாக *Digital Form* ஆக வெளிவருகிறது. உலகப்போர் நடைபெற்ற சமயங்களிலும், காகிதப்பஞ்சம் ஏற்பட்ட காலங்களிலும் இரண்டிரண்டு மாதங்களாக வெளிவந்துள்ளது நமது ப்ரியா. தற்போதுள்ள *Modern Technology*யின்படி *Digital Form* இதுவே முதன்முறையாகும்.

நமது நாட்டில் நிலவும் அஸாதாரண சூழ்நிலையால் அரசாங்கம் *Lockdown* அறிவித்தது. அதன் காரணத்தால் சித்திரை மாத இதழை உரியநேரத்தில் வழங்க முடியவில்லை. நிர்வாகத்தின் மூலமாக பலமுயற்சிகள் எடுக்கப்பட்டும், பகவத் சங்கல்பத்தினால் கைகூடவில்லை. இருப்பினும் தற்போது சித்திரை, வைகாசி இரண்டு மாதங்களுக்கு ஒரே இதழாக வெளிவருகிறது.

அச்சடித்த புத்தகம் போன்று பக்கங்களின் நிர்ணயம் *e-book* எனும் இதற்கு இல்லையாயினும், வாசகர்களின் படிக்கும் சௌகர்யம் கருதி பக்கங்களை அதிகரிக்கவில்லை. போன், கம்ப்யூட்டர், ஐபேட் மூலமாக புத்தகம் படிக்கும் வழக்கம் இன்னமும் நமது தேசத்தில் முழுவதுமாக பயன்பாட்டில் இல்லை.

பெரும்பாலானவர்கள் புத்தகமாக வாசிப்பதையே விரும்புவர். ஆதலால் எல்லாவித சௌகர்யங்களையும் உத்தேசித்தே ஸார்வரி சித்திரை/ வைகாசி ஒரே இதழாக வெளிவருகின்றது. வாசகர்கள் ச்ரமத்திற்கு க்ஷமித்தருள ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீமதழகியசிங்கரின் தமிழ்புத்தாண்டு அநுக்ரஹபாஷணத்தை நம்ப்ரியா முகநூல் பக்கத்தில் வெளியிட்டதைப் பலரும் மகிழ்ந்து கொண்டாடினர். "ப்ரியா வரவில்லை என்றாலும் அழகியசிங்கரின் அநுக்ரகபாஷணம் நன்னாளில் நமக்கு ப்ராப்தமானது" என அதுவும் அவனது இன்னருளே என தெரிவித்தனர்.

ஏறத்தாழ ஐம்பது நாட்களுக்கு மேலாக மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கை என்பதாக வாழ்க்கை முழுவதும் மாறிவிட்டது. "கொரொனா" எனும் வைரஸ் தொற்றினால் உலகில் பாதிப்படையாத நாடுகளே இல்லையெனலாம். நமது அரசாங்கமும், அதன் துறைகளும் எத்தனையோ வழிகளில் மக்களைக் காப்பாற்ற பாடுபட்டு வருகின்றனர். ஆனால் புற்றீசல் போல தொற்று வேகமாகப் பரவிவருவது மிகவும் வேதனையளிக்கிறது.

உலகநாடுகள் பொருளாதார சிக்கலில் சிக்கித்தவிக்கின்றன. பெரும் வல்லரசுகளும் கூட செயலற்றவையாகத்தான் உள்ளன. இப்போதுள்ள கால கட்டத்தை "யுகசந்தி"

என்பர் பெரியோர். அதாவது த்வாபரயுகம் முடியும், கலியுகத்தின் தொடக்கமுமாக உள்ள காலகட்டத்திற்கு யுகசந்தி என்பது பெயர். இதில் பல தர்ம ஸூக்ஷ்மங்கள் அடங்கியுள்ளன. பெரியோர்களிடத்தே அறிந்திடுக.

இதுபோன்ற காலத்தில் விளையும் கொடுமைகளை இதிஹாஸ புராணங்கள் நன்கு விஸ்தாரமாக வர்ணிக்கின்றன. அதற்காக காலத்தின் மீது மட்டும் பழியை சுமத்திவிட்டு நாம் வாளா இருத்தல் கூடாது. கூடியவரையில் தர்மானுஷ்டானங்களை விடாது செய்து வருவதற்கு முயற்சிக்க வேண்டும். பகவத் பக்தியை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும். நமது சந்ததிகளுக்கு பாரம்பர்யத்தின் பெருமைகளை நன்கு சொல்லித்தர வேண்டும்.

ஊடரங்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அலுவலகம் செல்லமுடியாத பல லௌகிகர்களும் ஸந்த்யாவந்தனம், பகவத் ஆராதனம் முதலிய நற்கருமங்களை மறுபடியும் தொடங்கியுள்ளனர் என்பது நமக்கு மிகமிக மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகத் தோன்றுகிறது. ''கெட்டதிலும் ஒரு நன்மை'' என்பதாக சில, பல அஸௌகர்யங்கள் ஊரடங்கில் உண்டானாலும் தர்மானுஷ்டானத்தில் ஊற்றம் அதிகரித்துள்ளது வரவேற்கத்தக்கது. ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டாலும் ''உள்ளடங்கும்'' - ஆத்ம சுத்தியைத்தரும் இக்கருமங்கள் தொடரவேண்டும்.

மிகவும் இக்கட்டான சூழ்நிலை இதனில், நம் ஸ்ரீமதழகியசிங்கராம் ஆசார்யன் வழிகாட்டியுள்ளபடி ''அச்யுதானந்த கோவிந்த'' திருநாமத்தை தொடர்ந்து ஜபம் செய்து, பெரும் ஆபத்திலிருந்து விடுபடுவோமாக.

வழக்கமாக இடம்பெறும் சில வ்யாஸங்கள் இடம் பெறாமைக்கு வாசகர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்.

கங்கையின் மேன்மை:-

''கங்கை, கங்கை'' எனும் நாமஸங்கீர்தனத்தினாலேயே நமது பாவங்கள் தொலையும் எனில் அந்நீரில் தீர்தாமடுவதும், அதைப்பருகுவதும் மேன்மையளித்திடும் என்பதைப் பேசவும் வேண்டுமோ? ''ஔஷதம் ஜாஹ்நவீதோயம்'' என்று ப்ரமாணங்கள் கங்கையின் தீர்த்தத்தையே மருந்தாகக் கூறுகின்றனர். இறக்கும் தருவாயிலிருப்பவனுக்கு வாயில் சிறிது கங்கைநீரை ஊற்றுவதும், அல்லது இறந்த உடலை கங்கை நீரில் நீராட்டுவதும் இந்துக்களின் புனிதச் சடங்காகிறது.

தற்போது கொரொனா வைரசுக்கான மருந்தினைக் கண்டுபிடிக்க கங்கைநீரை பயன்படுத்தலாமா? எனும் யோசனையில் ஆராய்ச்சியாளர்கள் செய்துவருவதாகத் தெரிகிறது. இது சுலபமாகுமா? இல்லையா? என்பதையெல்லாம் அப்புறம் பார்கலாம். கங்கை நீர் மருத்துவகுணம் மிக்கது என்பதை ஆராய்சியாளர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதே பெருமை தரக்கூடியதன்றோ. மேலும் ஊரடங்கு காலத்தில் ஆலை, சாயக்கழிவுகள், மனிதர்களின் கழிவுகள் முதலியன கலக்காததினால் கங்கை, யமுனை, காவிரி முதலான ஆறுகளும், நீர் நிலைகள் மாசில்லாத சுத்த தெளிந்த தீர்த்தமாகியுள்ளதையும் நாம் பார்க்கிறோம். இதனை நல்லதொரு வாய்ப்பாகக் கருதிக்கொண்டு நீர்நிலைகள் மீண்டும் மாசுபடுவதை முழுவதும் தடுக்கவேண்டும். தூய்மையான கங்காதேவி நமது துயர்துடைக்க வேண்டுகிறோம்.

குறைதீர்த்த கோவில் விழாக்கள்:-

பங்குனி உத்திரம் தொடங்கி, ஆழ்வார், ஆசார்யர் சாற்றுமறை, ஸ்ரீராமநவமி, ப்ரஹ்மோத்ஸவம் என தொடர்ச்சியாக பல உத்ஸவங்கள் ஊரடங்கு காலத்தில் களையிழந்தன. பங்குனி தொடங்கி, பின்னர் சித்திரை, வைகாசி, வஸந்தருதுவில் தான் பொதுவாக அனைத்து திருக்கோயில்களிலும் விசேஷ உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த ஸார்வரி வருடத்தில் அது ஸாத்யமில்லாமல் போனது.

மக்களின் நலனுக்காகவே அரசாங்கம் பொதுமக்களுக்கு கோவில் தரிசனம் இல்லை என்றறிவித்தாலும் நம் மனது ஏக்கமுற்றுத்தான் இருக்கிறது. இந்நிலையில் பெருமாளுக்கு நடைபெறும் திருவாராதனாதிகளில் ஒன்றும் குறைவில்லை என்பது மிக, மிக ஆறுதலான செய்தி. திருமலை முதலிய க்ஷேத்ரங்களில் மட்டுமே சேவிக்க முடிந்த நேரலை உற்சவங்களை தற்போது சமூக ஊடகங்கள் வாயிலாக பல திருக்கோயில்களைக் கண்டு பக்தர்கள் பரவசம் அடைந்தனர்.

ஸ்ரீபெரும்புதூர், மேல்கோட்டை ஸ்ரீபாஷ்யகாரர் உற்சவம், வானமாமலை ப்ரஹ்மோத்ஸவம், மீனாட்சி சுந்தரர் கல்யாணம், அழகர் ஆற்றிலிறங்கும் வைபவம் (ஆலயத்தினுள்ளேயே) என அனைத்து நேரலையில் பார்த்தபோது சற்றேமனம் ஆறுதலடைந்தது.
குறிப்பாக நம் ஸ்ரீ ஸன்னிதி ஆதினமிராசைச் சேர்ந்த அஹோபிலக்ஷேத்ர நரஸிம்ஹ ஜயந்தி, திருவள்ளூர் வீரராகவன் சைத்ர ப்ரஹ்மோத்ஸவம் அத்யற்புதமாய் நடைபெற்றது. ராகவனின் வைபவத்திற்கு ஒரு குறையுமின்றியும், சட்டதிட்டங்களுக்கு உட்பட்டும் தேவஸ்தான அனைத்து கைங்கர்ய பரர்களும் சைத்ர ப்ரஹ்மோத்ஸவத்தை நடத்திய விதம் அருமையிலும் அருமை. ப்ரியா சார்பில் அனைவர்க்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். விஷவ்யாதி பயம் நீங்கி ஓடிச்சென்று பெருமான்களை சேவித்திட அருள்புரிய வேண்டி வைத்ய வீரராகவனை வேண்டுகிறோம்.

◇◇◇◇◇◇

ஸ்ரீ யோக நரஸிம்ஹர்

ஸுகுணஸுசீலஸம்வாதம்

வைகுண்டவாஸி மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ.வே. மேல்பாக்கம் ஸ்வாமி

ஸுகுணன்:-

ஸுசீலா உன்னைப் பார்த்து ஒரு வருஷமாயிற்று க்ஷேமந்தானே? முன்பு சந்திக்க நேர்ந்த போது ஊர்த்வ-புண்ட்ரதாரண (திருமண் இடுதல்) த்தைப் பற்றி தெளிவாய் எடுத்துரைத்தாய். இப்பொழுது ஒரு ஸந்தேஹம். உன்னைக் கேட்டு இவ்விஷயத்தில் தெளிவை யடைய விரும்புகிறேன். நீ பெரியோர்களிடம் ஸதா ஸஹவாஸம் செய்யும் பாக்யசாலி அல்லவா?

ஸுசீலன்:-

ஸுகுணா! உன்னை ஸந்திப்பதில் எனக்கு மிகவும் ஸந்தோஷம். உன்னைப் போன்ற ஆப்தர்களின் ப்ரீதியினாலும், ஸதாசார்ய கடாக்ஷத்தினாலும் க்ஷேமத்திற்கு ஒன்றும் குறையில்லை. உன் ஸந்தேஹத்தைக் கேள். தெரிந்தவரையில் பதிலுரைக்கிறேன்.

ஸுகுணன்:--

ஸகே! தேவாலயங்களில் தேவதைக்கு நிவேதன ம் செய்த அந்நம் முதலியவைகளை கோஷ்டியில் விநியோகம் செய்வதையும், அதைப் பெரியோர்கள் வாங்கி சாப்பிடுவதையும் காண்கிறோம்.

சில ஆலயங்களில் (சிவாலயம் முதலியவைகளில்) அவைகளை உபயோகிப்பதில்லை. இவற்றுள் எது ஸரியானது? இதற்கு ஏதாவது சாஸ்திரத்தில் விதிதான் உண்டா?

ஸ்மிருதிகளில் – *"நிர்மால்யஞ்ச நிவேத்யஞ்ச புக்த்வா சாந்த்ராயணம் சரேத்"* தேவதைகளுக்கு நீவேதநம் செய்த (நிர்மால்ய) தை சாப்பிட்டால் சாந்த-ராயணம் என்கிற வ்ரத அநுஷ்டாநத்தை அதற்கு பிராயச்சித்தமாக விதித்திருக்கிறபடியால், *"தேவாந்ந போஜநம் கூடாது"* என்றல்லவா ஏற்படுகிறது! மனுவும், *'அநுபாக்ருத மாம்ஸஞ்ச தேவாந்நாநிஹ வீம்ஷிச'* என்று தேவாந்நத்தை சாப்பிடக்கூடாது என்று கூறியிருக்கிறாரே, இவ்விஷயத்தில் தத்வ-த்தை விளக்கவேணும்.

நம் முன்னோர்கள் இவ்விஷயமாக ஏதாவது விசாரம் செய்திருக்கிறார்களா?

ஸுசீலன்'-

ஸுகுணா! *"ஸ்ரீ ஆளவந்தார்"* என்று

ப்ரஸித்தி பெற்ற *"யாமுனாசார்யர்"* ஆகம ப்ராமாண்யம் என்கிற க்ரந்தத்தில் இதைப்பற்றி அருளிச் செய்திருக்கிறார். அதை அநுஸரித்தே ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் இவ்விஷயத்தில் சாஸ்திரங்களைக் கொண்டு விரிவாக ஆராய்ந்து நிர்ணயம் செய்துள்ளார்.

ஸுகுணன்:-

மித்ர! தூப்புல்வள்ளல் நிர்ணயித்துள்ளதின் ஸாரத்தை நான் அறிய ஆவலாய் இருக்கிறேன். கூறவேண்டும்.

ஸுசீலன் :-

ஸுகுணா! மஹோபநிஷத்தில் *'விஷ்ணுநா அத்தம் அச்சுந்தி..... தஸ்மாத் வித்வாம்ஸோ விஷ்ணுபஹ்ருதம் பக்ஷயேயு:* (பகவான் அமுது செய்ததை உட்கொள்ள வேண்டும் என்று விதித்திருக்கிறபடியால் இதற்கு விருத்தமாக ஸ்மிருதிகள் சொல்ல முடியாது) *"ச்ருதிக்கு விருத்தமாய் சொன்னால் ஸ்ம்ருதிகள் ப்ரமாணங்களன்று"* என்று மீமாம்ஸையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் பகவானைத் தவிர மற்ற தேவதைகளுக்கு நிவேதகம் செய்யப்பட்டதை ஸ்வீகரிப்பதையே முற்கூறிய *"நிர்மால்யஞ்ச நிவேத்யஞ்ச"* என்கிற வசநம் தடுக்கிறது என்று கொள்ள வேணும்.

மேலும், ப்ராம்ஹபுராணத்தில் *"விஷ்ணோர் நிவேதிதம் சுத்தம் முநிபிர்போஜ்யமுச்யதே", "அந்யவேத்யந்து நிர்மால்யம் புக்த்வா சாந்த்ராயணம் சரேத்"* என்றுள்ளது.

இவ்விஷயம் விஷ்ணுவுக்கு நிவேதனம் செய்தது சுத்தமாகையால் சாப்பிடத் தகுந்தது. மற்றதே நிர்மால்ய மென்றும் அதற்கு ப்ராயச்சித்தமும், ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

அதுமாத்திரமா! பகவானுக்குநிவேதனம் செய்ததை 'நிர்மால்ய' சப்தத்தினாலும் குறிப்பிடக் கூடாது' என்று கூட ஈச்வர ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிறது.

ஸுதணன்:-

மித்ரமணே! நீ உரைப்பது சரிதான். ஆனால் தேவாந்தங்களை உட்கொள்ளக்கூடாது என்கிற மனுஸ்மிருதி வசநத்தின் கதி என்ன?

ஸுசீலன் .--

ஸுகுணா! பகவானுக்கு நிவேதநம் செய்வதற்காகச் செய்யப்பட்ட அந்நத்திற்கு *"தேவாந்தம்"* என்று பெயர் என்றும் அதை சாப்பிடக்கூடாது' என்றும் ஸ்ரீ பௌஷ்கர ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடியால், அதையேதான் 'சாப்பிடக்கூடாது' என்று மனுவும் நிஷேதித்திருக்கிறாரே யொழிய நிவேதனம் செய்த பிறகுகூட சாப்பிடக்கூடாது என்று சொல்லவில்லை என்று கதிகல்பிப்பதுதான் உசிதம்.

மனுஸ்ம்ருதி, பாஞ்சராத்ரத்தை மூலமாகக்

கொண்டது என்று மஹாபாரதத்திலேயே சொல்லியிருக்கிறபடியால் மூலமான பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளுக்கு விருத்தமாக மனு சொல்வதற்கு ந்யாயமில்லை.

ஈச்வர ஸம்ஹிதையில் *'விஷ்ணுவுக்கு நிவேதகம் செய்த அந்நத்தை புஜித்தால் பாவங்களை எல்லாம் போக்கும்'* என்றும் தபஸ்ஸுக்களாலு மடைய முடியாத புண்யத்தைத் தருவதாகவும் ஸோமபாகத்தைக் காட்டிலும் பரிசுத்தியைச் செய்யக்கூடியது என்றும், மற்றவைகளை உபயோகிப்பது பாபஹேதுவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், பகவானுக்கு நிவேதனம் செய்ததை *'பகவத் ப்ரஸாதம்* என்று பஹுமானமாகச் சொல்ல வேணுமென்றும், கேவலம் அந்நம் முதலிய சப்தங்களால் சொல்வது *'நிர்மால்யம்'* என்கிற எண்ணத்தினால் தூஷிப்பதும் நரகத்திற்குக் காரணமென்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

பகவானுக்கு நிவேதனம் செய்யப்படாததை புஜிப்பதே சாஸ்திரத்தில் தடுக்கப்படுகிறது *''நாநிவேத்ய ஹரே: கிஞ்சித் ஸமச்நீயாச்ச பாவநம்'* என்று, *சேஷபுக்திம் ப்ரசம்ஸந்தி முநய: தத்வதர்சிந:'* என்று மஹர்ஷிகளும் பகவச்சேஷத்தை சாப்பிடுவதை ச்லாகிப்பதாகவும் *'விஷ்ணுதத்வம்'* என்கிற க்ரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஸுகுணன்:-

மித்ர! போஜநத்தின மத்தியில் முன் பகவானுக்கு நிவேதநம் செய்யப்படாத தயிர், பால் முதலிய வஸ்துக்கள் திடீரென்று வந்தால் என்ன செய்கிறது? அதை உட்கொள்ளலாமா?

ஸுசீலன்:-

அதை மனத்தினால் பகவானுக்கு நிவேதனம் செய்தே பிறகு உட்கொள்ள வேணும் என்று ஈச்வர ஸம்ஹிதை முதலியவை உபதேசிக்கின்றன.

ஸுகுணன்:

ஸுசீலா! சேஷபுக்திம்' என்கிற விடத்தில் சேஷ சப்தம் நிவேதனம் செய்ததைக் காட்டிலும் 'மிகுந்த' அதாவது, பாக பாத்திரத்தில் உள்ள நிவேதநம் செய்யப்படாத பாகத்தைச் சொல்கிறது என்றும் சொல்லலாமல்லவா! ஆகையால் இது எப்படி ப்ரமாணமாக ஆகும்.

ஸுசீலன்:--

பகவானுக்கு நிவேதநம் செய்த அந்நத்தாலேயே அநு யாகம் முதலே-வைகளைச் செய்யவேணுமென்று *'ஹ்ருதித்யாயந் ஹரிம் தஸ்மை நிவேத்யாந்நம் ஸமாஹித:| ப்ராணாய சேத்யபாநாய வ்யாநாய ச தத: பரம் | உதாநாய ஸமாநாய ஸ்வாஹேதி ஜுஹுயாத் க்ரமாத்'* என்கிற வசனங்கள் ஸ்பஷ்டமாக விதித்திருப்பதாலும், நிஷேதம் செய்திருப்பது ருத்ராதிகளுக்கு நிவேதநம் செய்த விஷயத்திலேயே என்று பரிஹாரம் ப்ரமாணத்துடன் செய்யப்பட்டபடியாலும் சேஷசப்தம்: பகவானுக்கு நிவேதநம் செய்யப்பட்டவற்றை சொல்வதாகத்தான் நிச்சயிக்கவேண்டும்.

ஸுகுணன்: -

ஸகே! ஒரு விஷயம் கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாமல் பதில் கூறுவாயா?

ஸுசீலன்:--

கொஞ்சம்கூட சங்கையில்லாமல்

கேள். சொல்கிறேன். இவ்விஷயத்தில் கோபித்துக்கொள்ள என்ன இடமிருக்கிறது.

ஸுகுணன்:-

ஸுசீலா, நிவேதநம் செய்வது என்பதை பாவனை மாத்ரமாகவே செய்கிறோம். இதனால் அதில் பகவான் ஏதாவது ஒரு அம்சத்தையாவது உட்கொள்கிறாரா? பகவானுக்கு முன்னதாக வைத்த ப்ரஸாதம் கொஞ்சமும் குறையாமல் இருப்பதை கண்கூடாகக் காண்கிறோமல்லவா? இப்படி பகவான் உட்கொள்ளாமலிருக்கும் போது 'உட் கொண்டதின் மிகுதி' என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற சேஷ சப்தம் எப்படி இங்கு பொருந்தும்?



ஸுசீலன் :--

ஸுகுணா! நீ கேட்கும் விஷயம் ப்ரத்யக்ஷத்தில் பார்த்தால் ஸரிதான். ஆனால், பகவானுக்கு நிவேதநம் செய்யும் படி விதிக்கும் பாஞ்சராத்ரவசநங்களே நிவேத்யத்தில் ஸூக்ஷ்மமான அம்சத்தை பகவான் ஸ்வீகரிக்கிறார்'என்று அறிவித்திருப்பதால், அதினுடைய மிகுதியை சேஷசப்தம் செய்வது மிகவும் பொருத்தமே.

ஸ்தோத்ரரத்னத்தில் ஸ்ரீ ஆளவந்தார் "த்வதீயபுக்தோஜ்ஜித சேஷபோஜிநா" என்று விஷ்வக்ஸேனரை பகவான்உட்கொண்டு விடப்பட்ட சேஷத்தை சாப்பிடுபவராகக் குறிப்பிடுவதையும் இவ்விடத்தில் கவனிக்கவேண்டும்.

ஸுகுணன்:--

ஸகே! ப்ரமாணங்கள் இப்படி விதித்திருந்தபோதிலும் இதற்கு சிஷ்டர்களின் அநுஷ்டானம் உண்டா?

ஸுசீலன்:-

ஸுகுணா! ஸ்ரீமத் ராமாயணத்தில்

கதே புரோஹிதே ராம: ஸ்நாத்வா நியத
மாநஸ: |
ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா
நாராயணமுபாகமத் ||

ப்ரக்ருஹ்ய சிரஸாபாத்ரம் ஹவிஷோ
விதிவத்தத: |
மஹதே தைவதாயாஜ்யம் ஜுஹாவ
ஜ்வலிதே அநலே ||

சேஷஞ்சஹவிஷ: தஸ்யப்ராச்யா
சாத்மநோஹிதம் |
த்யாயந் நாராயணம் தேவம்
ஸ்வாஸ்தீர்ணே குசஸம்ஸ்தரே ||

வாக்யதஸ்ஸஹ வைதேஹீயா
பூத்வா நியதமா நஸ |
ஸ்ரீமத்யாயதநெவிஷ்ணோ:
சிச்யே நரவராத்மஜ:||

என்று ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகத்திற்காக முன் தினத்தில் ஸ்ரீமந் நாராயணனான ஸ்ரீரங்கநாதனை முறைப்படி ஆராதித்து நிவேதநம் செய்யப்பட்ட அந்நத்தை அமுது செய்து ஸீதைப் பிராட்டியுடன் வ்ரதமநுஷ்டித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே மஹாபாரதத்தில் உபரிசரவஸு முதலியவர்களும் பகவானை ஆராதித்து சேஷபோஜநம் செய்ததாகக் காண்கிறது. இதைக்காட்டிலும் வேறு சிஷ்டாநுஷ்டாநம் என்ன வேண்டும்?

ஸுகுணன்:-

மித்ர! வைச்வதேவம் செய்து சேஷத்தையல்லவா ப்ராஹ்மணர்கள் சாப்பிடவேணும். வைச்வதேவமோ இதர தேவதைகளைக் குறித்து செய்வதானபடியால் பகவானுக்கு நிவேதநம் செய்த அந்நத்தைக்கொண்டு வைச்வதேவத்தைச் செய்வது உசிதமாகுமா?

மற்ற தேவதைகளை பகவானுக்கு புத்ரர்களாகவும் சிஷ்யர்களாகவும் சாஸ்த்ரம் சொல்லியிருக்கிறபடியால் பிதாவின் உச்சிஷ்டத்தை (எச்சிலை) புத்ரன் சாப்பிடுவதும், குருவின் உச்சிஷ்டத்தை சிஷ்யன் சாப்பிடுவதும் சாஸ்த்ர ஸம்மதமாகையால் பகவானுடைய சேஷத்தினால் மற்ற தேவதைகளை ஆராதிப்பது நியாயமெனில்: பகவத்சேஷத்தை புஜிப்பது அவர்களுக்கு சாஸ்த்ர ஸம்மதமாயினும், நாம் பகவானுடைய உச்சிஷ்டத்தை மற்ற தேவதைகளுக்கு இடுவது தகாதல்லவா?

லோகத்தில் புத்ரசிஷ்யாதிகளை ஆராதிப்பவர்கள்வ் பிதா குரு முதலியவர்களை நியமேன ஆராதித்து அவர்கள் உடைய உச்சிஷ்டத்தால் புத்ராதிகளை ஆராதிப்பதில்லையே? ஆகையால் பகவானுக்கு நிவேதனம் செய்த சேஷத்திற்கு வைச்வதேவத்தில் உபயோகமில்லையாதலால் அதின் சேஷமில்லாததை எப்படி புஜிப்பது உசிதமாகும்?

ஸுசீலன்:--

ஸுகுணா! பாத்மம் முதலியவைகளில் *'விஷ்ணோர் நிவேதிதாந்நேந யஷ்டவ்யம் தேவதாந்தரம்| பித்ருப்யச்சாபிதத்தேயம் தச்சாநந்த்யாயகல்பதே'* என்று பகவத்சேஷத்தைக் கொண்டே மற்ற தேவதைகளை ஆராதிப்பதையும் அதினாலேயே அந்த தேவதைகளுக்கு த்ருப்தியையும் விதித்திருப்பதால் வைச்வதேவசேஷமும் பகவத்சேஷமேயாதலால் ஒருவித தோஷமுமில்லை.

இதனாலும் பகவானுக்கு நிவேதநம் செய்யப்படாததை புஜிக்கக்கூடாது என்கிற நிஷேதத்தினாலும், ப்ராணாஹுதியும் பகவானுக்கு நிவேதநம் செய்ததினாலேயே என்பது ஸித்திக்கிறது.

இவ்வர்த்தம் *''ஹ்ருதித்யாயந்''* என்கிற மஹாபாரத வசநத்தினால் ஸ்பஷ்டமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹ்ருதயத்தில் (அந்தர்யாமியாய்) இருக்கிற பகவான் அமுது செய்வதாக நினைத்து நிவேதநம் செய்யப்பட்டதை சாப்பிடுவதும் எப்படி அந்த பகவானுக்கு ஆராதனமாக ஆகிறதோ! அப்படியே வெளியில் நிவேதநம் செய்ததை ப்ராணாதிகளை சரீரமாகக் கொண்டு பரமாத்மா அமுது செய்வதாக அநுஸந்தித்துக்கொண்டு ப்ராணாஹுதி

செய்வதும் பகவானுக்கு ஆராதனம்தான்.

இவ்விஷயம் ஸ்ரீ பாஷ்யத்தில் மூன்று உலகத்தை சரீரமாகக்கொண்ட *வைச்வாநரன்'* என்று பெயர்பெற்ற பரமாத்மாதான் ப்ரணாதிக்கு ஆதாரமாக உபாஸக சரீரத்திலிருப்பதாக அநுஸந்தானம் செய்யவேண்டும்' என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஆகையால் எல்லா வைதிகர்களும், பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டு பரிசுத்தமான அந்நத்தைக்கொண்டே, வைச்வதேவத்தையும் ப்ராணாக்நி ஹோத்ரத்தையும் செய்து வைச்வாநர-மூர்த்தியான பகவானை யாராதிப்பதாகிற அநுயாகத்தை தினந்தோறும் அநுஷ்டிக்க வேண்டும்' என்பது இதனால் ஸித்தம்.

ஸுகுணன்:-

ஸுசீலா! இப்படி ஸூக்ஷ்மமான சாஸ்த்ரார்த்தங்கள் எளிய க்ரந்தங்கள் மூலமாய்த் தெளிவாக உபதேசித்த ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகருக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

ஸுசீலன்:-

ஸுகுணா! ஆம் மாயனும் காணகில்லான்! இப்படிப்பட்ட தூப்புல் வள்ளலையும் அம்மஹான் காட்டிய வழியைப்பின்பற்றி, என்றும் இந்த வைதிக தர்மம் விச்சேதமின்றி நடக்கும்படி மஹோபகாரம் செய்தருளின ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனிடமும் க்ருதஜ்ஞர்களாயிருப்பது நம்முடைய ஸ்வரூபப்ராப்தம். மேலும்,

ஹைதராபாத் ஸ்ரீஅஹோபிலமடம் சேர்த்தி உத்ஸவம்

அஹோபிலத்தில் மந்த்ராலய மடாதிபதி ஸ்ரீமத் அழகியசிங்கருடன்

திருமலை ஸ்ரீநிவாஸனின் பட்டு வஸ்த்ரங்கள் ஸ்ரீப்ரஹ்லாத வரதனுக்கு

சமிதபவபயாநாம் சங்கசக்ராதி சிஹ்நை :
திவிஷததிக பூம்நாம் தீப்யதாமூர்த்வ
புண்ட்ரை: |
ப்ரதிதகுண கணாநாம் ப்ராபண
ப்ராசநாத்யை :
அயமஹமநகாநாம் அஸ்மி பாத்ரம்
தயாயா; ||

என்றே நம் ஒவ்வொருவருடைய அநுஸந்தானமும் இருக்கவேண்டும்.

[''ஸுதர்சன பாஞ்சஜன்யத்தை பாஹூ மூலத்தில் தரிப்பதனால் ஸம்ஸார பயமற்றவர்களாய், தேவர்களுக்கும் மேற்பட்ட மஹிமையுடையவர்களாய் ஊர்த்தவ புண்ட்ரங்களை தரித்து விளங்குபவர்களாய், பிரஸித்திபெற்ற குணங்கள் நிறைந்தவர்களாய், பகவானுக்கு நிவேதநம் செய்தாந்த போஜநத்தினால் பாபத்தைப் போக்கி-க்கொண்ட மஹான்களுடைய க்ருபைக்கு அடியேன் பாத்ரமாகிறேன்.''] .

◇◇◇◇◇◇◇

ஸ்ரீ வீரராகவன் சேர்த்தி உத்ஸவம், திருவள்ளூர்

திருமலை மங்களாசாசனம்

திருச்சானூர் மங்களாசாசனம்

மருளொழி நீ மடநெஞ்சே – 26

விடலரிய அருள் வரதர் அடியமே

திருப்புல்லாணி ஸ்ரீ ஸ்ரீநிவாஸன்

1. முன்னுரை

தற்போது புதிய வருடமான "ஸார்வரி" நாம ஸம்வத்ஸரம் துவங்கியிருக்கிறது. இது (மேஷ) சித்திரை மாதம். இம்மாதத்திற்கு அதிதேவதை விஷ்ணு. இந்த மாதத்திற்கு தனிப்பெருமை உண்டு.

(a) புதிதாகத் தொடங்கும் ஸம்வத்ஸரத்தின் முதல் மாதமிது.

(b) கரிகிரி மேல் நின்ற காவலனாம் – ஸ்ரீ பேரருளாளன் அவதரித்த மாதம்; சித்திரை – ஹஸ்தம்.

(c) எந்த ஆழ்வார் காட்டிய தொல்வழியே நல்வழி என்று ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் பரக்கப்பேசி பறை சாற்றினாரோ அவ்வாழ்வார் அவதரித்த மாதம் இது. ஸ்ரீ மதுரகவிகள் இம்மாதம் "சித்ரா" நக்ஷத்ரத்தில் அவதரித்தவர்.

(d) நம் தர்ஸந ஸ்தாபகரான ஸ்ரீ பாஷ்யகாரர், சித்திரையில் ஆதிரை நாள் (ஆர்த்ரா) அவதரித்து நாரணனைக் காட்டிய வேதம் களிப்புறும்படி செய்து நாட்டில் நீசச் சமயங்களை அழித்து, பெரிய பெருமாள் ஸ்ரீ ரங்கநாதனே கதி என்று வாழ்ந்தருளி இந்த ஸம்ப்ரதாயத்துக்கே ஏற்றத்தைக் கொடுத்தருளினார்.

(e) இதைத் தவிர ஸம்ப்ரதாயத்தில், ஸ்ரீ நடாதூரம்மாள் போன்ற பல மஹான்கள் அவதரித்ததும் இம்மாதமே. இம்மாதிரியான ஏற்றமிகு ஆசார்யர்களின் ஸாதனைகளையும் போதனைகளையும் போற்றி உகப்பதும் அது தம்மை நம் புந்தியிற் கொள்வதும் அவர்களின் கீர்த்தியையும் புகழையும் பாடிப்பறை சாற்றுவதும் நமக்கு ஸ்வரூபம்.

2. ஸ்ரீ பாஷ்யகாரர்

ஸம்ப்ரதாயத்தில் நாயக ஸ்ரீ: என விளங்கும் ஸ்ரீ பாஷ்யகாரரின் பெருமையையும் எண்ணிலடங்காக் கல்யாண குணங்களையும் நம் போன்றவர்கள் பேச முற்படுவது ஸாத்யமன்று.

அது நம்முடைய பேதமையையே குறிக்கும். இருப்பினும் அவர்பால் கொண்ட பக்தியினாலும் அவாவினாலும் அவர் அருளிச் செய்த க்ரந்தங்களின் மேல் உள்ள ஈடுபாட்டாலும், ஒரு சிலவற்றை இங்கே விண்ணப்பிக்கிறேன்.

ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த க்ரந்தங்கள் ஒன்பது. இது அனைவரும் அறிந்ததே. அதில்

முக்யமானது ஸ்ரீ வேத வ்யாஸ பகவான் அருளிச்செய்த ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விஶிஷ்டாத்வைதபரமாக உரையிட்ட பணி மிகவும் போக்யம் என்றால் அது மிகையாகாது.

மற்ற விளக்கவுரைகளுக்கு எல்லாம் இல்லாத ஒரு தனிச்சிறப்பு ஸ்வாமி ஸ்ரீ எம்பெருமானார் அருளிச்செய்த இந்த பாஷ்யத்திற்கு உண்டு என்பதனால், ஸ்ரீ ஸரஸ்வதீ தேவீ இதனை ஸ்ரீ பாஷ்யம் என்றே பெயர் சூட்டி பெருமை பெற்றாள்.



3. ஸ்ரீ பாஷ்யத்தின் அமைப்பு

முன்னமே எழுதியபடி இந்த க்ரந்தத்தின் பெருமை அளவிலடங்கா. இதை நம் ஸ்வாமி ஸ்ரீ எம்பெருமானார் எப்படிப் பிரித்திருக்கிறார்? அத்தியாயங்கள் எவ்வளவு? பாதங்கள் எத்தனை? அதிகரணங்கள், ஸூத்ரங்கள் எவ்வளவு? என்பதைப் பற்றி முதலில் அறிந்து கொள்வோம்.

ப்ரஹ்மத்தைப் பற்றி விசாரித்து ஸ்தாபிப்பது தான் இந்த நூலின் நோக்கம். இதனை ஶாரீரக ஶாஸ்த்ரம் எனவும் கூறுவர்.

மொத்தம் நான்கு அத்யாயங்கள். ஒவ்வொரு அத்யாயத்திலும் தலா நான்கு பாதங்கள். ஆக மொத்தம் பதினாறு பாதங்கள். ஒவ்வொரு பாதத்திலும் பல அதிகரணங்கள் உள்ளன.

இப்படியாக உள்ள அதிகரணங்களின் எண்ணிக்கை 156. இவ்வதிகரணங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ ஸூத்ரங்கள் உள்ளன. மொத்த ஸூத்ரங்களின் எண்ணிக்கை 545.

நான்கு அத்யாயங்களின் பெயர்களும், அத்யாய ஸாரமும், பாதங்கள் அதிகரணங்கள் மற்றும் ஸூத்ரங்களின் எண்ணிக்கையும் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்படுகின்றன.

•முதலாம் அத்யாயம் : ஸமன்வயாத்யாயம்

லோகத்தில் உள்ள ஸகல விதமான பொருள்களுக்கும் மூலகாரணமான வஸ்து பரப்ரஹ்மமே.

பாதம்	அதிகரணம்	ஸூத்ரம்
1	11	32
2	6	33
3	10	44
4	8	29
	35	**138**

•இரண்டாம் அத்யாயம் : அவிரோதாத்யாயம்

பிற மதங்களான ஸாங்க்யம், பௌத்தம் ஜைனம் முதலியவைகளின் கொள்கைகள் ஶ்ருதிக்கு விரோதமாகவும் யுக்திக்கு விரோதமாகவும் இருப்பதை மறுத்து, இந்த ஆக்ஷேபங்களுக்குப் பதில் கூறி ப்ரஹ்மம் தான் ஜகத் காரணம் என்று மனு, யாஜ்ஞவல்க்ய ஶ்ருதிகளின் வாக்யங்களைக்

கொண்டு ஸமாதானம் அருளிச் செய்கிறார்.

பாதம்	அதிகரணம்	ஸூத்ரம்
1	10	36
2	8	42
3	7	52
4	8	19
	33	**149**

•மூன்றாம் அத்யாயம் :

ஸாதனாத்யாயம்

பரமாத்மாவே உபாஸிக்கத் தகுந்தவன் என்று ஸ்பஷ்டமாகக் கூறிப் பின்னர் அவனே உபாயம் என்றும் அவனை அடைவதற்கான வித்யைகளைப் பற்றியும் ஸாதிக்கிறார்.

பாதம்	அதிகரணம்	ஸூத்ரம்
1	6	27
2	8	40
3	26	64
4	15	51
	55	**182**

•நான்காம் அத்யாயம் :

பலாத்யாயம்

உபாஸனத்திற்குப் பலனான எம்பெருமானை அடைவதைப் பற்றி விளக்கப்படுகிது.

பாதம்	அதிகரணம்	ஸூத்ரம்
1	11	19
2	11	20
3	5	15
4	6	22
	33	**76**

ஸ்ரீ வீரராகவன், திருவள்ளூர்

நம் ஸ்ரீஸந்நதி ஆராதகர் வடுவூர் ஸ்ரீஉ.வே லக்ஷ்மிநரஸிம்மச்சார் ஸ்வாமியை ஸ்ரீமதழகிய சிங்கர் கௌரவித்தல்

4. ஸ்வாமி ஸ்ரீ தேஸிகனின் திருவுள்ளம்

ஸ்வாமி எம்பெருமானாரின் ஸ்ரீ பாஷ்யத்தின் கருத்துக்களை செவ்வனே விளக்க வேண்டி ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் அதிகரண ஸாராவளி என்றதோர் அத்புத க்ரந்தத்தை அருளிச் செய்து அதில் அதிகரணங்கள் ஒவ்வொன்றுக்கும் சில (பல) ஸ்லோகங்களை அருளிச் செய்கிறார்.

பெரியோர்கள் கூறுவர். ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் தம்மை த்ராவிட வேத ஸாகத்யாயீ என்று கூறிக் கொள்வதில் பெருமை கொள்பவராம். த்ரமிட பாஷையிலே தாம் அருளிச் செய்த 'ப்ரபந்த ஸாரம்' என்னும் ப்ரபந்தத்தில் 'சந்தமிகு தமிழ்மறையோன்' என்றே தம்மைக் கூறிக் கொள்கிறார்.

மேலும், தாம் அருளிய மெய்விரத மான்மியம் (ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்) என்னும் தமிழ் ப்ரபந்தத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த 16 பாதங்களின் கருத்துக்களை வெகு அழகாக, நேர்த்தியாக 16 வரிகளிலே ஸாதித்து மகிழ்கிறார்.

முடிவாக, கருணையே வடிவாகக் கொண்ட அக்கார்மேனி அருளாளருக்கு அடியவராக இருந்து கைங்கர்ய ஸ்ரீயைப் பெற்று இன்புறுவோம் எனத் தலைக்கட்டுகிறார் – விடலரிய அருள் வரதர் அடியுமே!! (முழுப்பாட்டையும், பாசுர வரிகளின் ஆழ்ந்த பொருளினையும் அடுத்த ஸஞ்சிகையில் பார்த்து ரஸிப்போம்.

◇◇◇◇◇◇◇

சேலையூர் ஸ்ரீஅஹோபிலமடம் சேர்த்தி உத்ஸவம்

ஸ்ரீ நரஸிம்ஹ ஸஹஸ்ரநாம ஹோமம்(வடுவூர்)

பக்தாம்ருதம்

அனாதியான, நித்யமான வேதங்களுக்குத் துல்யமானவையாய் ஏற்கப்பட்டவை த்ராவிடவேதமாகிற ஆழ்வார்களின் ஈரச்சொற்களாலான அருளிச்செயல்கள்.

அவற்றுள்ளும், ஸாமவேத ஸாரமாய் அமைந்தது த்ரமிடோபநிஷத்தாகிற திருவாய்மொழி. வேதங்களின் ஸிரஸ்ஸான அர்த்தநிர்ணய பாகமாகிற உபநிஷத்துக்கள் போல், அருளிச்செயல்களில் ஹ்ருதயமாயிருந்து தத்வ, ஹித, புருஷார்த்தங்களைத் தெளிவாக வரையறுத்து அறிவிப்பது ஸடகோப வாங்மயமாகிற இந்த திருவாய்மொழி. பொதுவில் வாங்மயமாவது... ஆசார்ய ஸிஷ்யர்களுக்கிடையே ஸப்த உச்சாரண அனுச்சாரண ரூபமாக வந்த வேதங்கள். த்ராவிடவேதமாகிற அருளிச்செயல்களுள், நம்மாழ்வார் வாக்கிலிருந்து வெளிப்பட்டதை குறிக்கும் வகையில் 'ஸடகோப வாங்மயமானது திருவாய்மொழி.

வைகாசி விசாக திருநந்நாளில் அவதரித்த எழிற்குருகை மாறனின் திருவடிகளை ஸ்மரித்து அவர்தம் வாய்மொழியான பக்தாம்ருதத்தை சிறிது அனுபவிப்போம்.

ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளின் மேன்மையையும்,அதில் நிரூபிக்கப்பட்டுள்ள பகவானுடைய கல்யாணகுணங்களின் அளத்தற்கரிய விரிவையும் நினைந்து த்ராவிடவேதத்தை வணங்குகிறார் ஸ்ரீமந்நாதமுனிகள்.

பக்தாம்ருதம்...

இந்த திருவாய்மொழி எப்படிப்பட்டது? நம் பூர்வாசார்யர்களின் வழியில் திருவாய்மொழியை அனவரதம் (இடையறாது) அனுபவிக்கும் பக்தர்களுக்கு அளவற்ற போக்யதையை சுவைமிகு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய அம்ருதம் போன்றது. ஆழ்வாரே 'தொண்டர்க்கமுதுன்னச் சொல்மாலைகள்

भक्तामृतं विश्व जनानुमोदनं सर्वार्थदं श्रीशठकोपवाङ्मयं |
सहस्रशाखोपनिषत्समागमं नमाम्यहं द्राविडवेदसागरम् || (नाथमुनिकळ्)

சொன்னேன், அண்டத்தமரர் பெருமான் அடியேனே' (திருவாய்.9.4.9) என்ற பாசுரத்தில் கூறியபடி, பரமைகாந்திகளான அடியார்களை அமுதுண்ணப்பண்ணுவது இது.

விஶ்வஜனானுமோதனம்...

லோகத்திலுள்ள கற்றுணர்ந்த அறிஞர்கள், கல்லாதார் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவராலும் அனுபவிக்கப்படக்கூடியது.

பண்டிதரானவர் இதை தாம் ஒரு ஸதாசார்யனிடத்தில் ஆழக்கற்று அதன் பலவேறு அம்ஶங்களை ஆராய்ந்து, அதை ஏனையோரிடத்தும் பரிமாறிக்கொண்டு ஆனந்தமடைகின்றனர்.

பாமரரான பக்தரோவென்னில், இதன் அர்த்தங்களை மட்டும் ஓரளவு அறிந்தும், அனவரதம் அதன் ஶப்த உச்சாரணத்தை மட்டும் கைக்கொண்டு வாசிக கைங்கர்யத்தினாலேயே ஆனந்தமடைகின்றனர். இதனால் இது அனைவராலும் ஏற்கப்பட்டும், அனுபவிக்கப்பட்டும் விஶ்வஜனானுமோதனமாகிறது.

ஸர்வார்த்ததம்...

வேண்டிற்றெல்லாம் தரும் என்பதாக, பகவதனுபவத்திற்கு அபேக்ஷிதமான தத்வ ஹித புருஷார்த்தங்கள், அர்த்தபஞ்சகம் என்றவாறான இன்றியமையாத அனைத்தையும் அளிக்கக்கூடியது.

ஸஹஸ்ரஶாக-உபநிஷத் ஸமாகமம்...

இப்படி பக்தாம்ருதமாயும், விஶ்வஜன அனுமோதனமாயும், ஸர்வார்த்ததமாயும் உள்ள ஶடகோப வாங்மயமான இந்த திருவாய்மொழி, ஆயிரம் ஶாகைகளைக் கொண்ட ஸாமவேத உபநிஷத்துக்களின் அர்த்தங்களையும் தன்னுள்ளே கொண்ட த்ராவிடவேத ஸாகரமானது.

இப்பேற்பட்ட திருவாய்மொழியமுதத்தின் மேன்மையைக் காட்டுகிறார் ஸ்வாமி தேசிகனும் தம் 'த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி'யில்.

ஶாஸ்த்ரங்கள் நிலைநிறுத்துவது, ஜீவர்களாகிய நாம் அடையவேண்டியதான உபேயமும் (ப்ராப்யம்), அதை அடைவிக்கும் உபாயமும் (ப்ராபகம்) ஶ்ரிய: பதியான ஸ்ரீமந்நாராயணனே என்பது.

இதுவே திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களிலும் காட்டப்படும் திரண்ட-பொருள் என்று ஸ்வப்ராப்தயே ஸ்வயமேவ உபாயு: இதி என்றதிலும், தேவ: ஸ்ரீமான் ஸ்வஸித்தே: கரணமிதி வதந் ஏகமர்த்தம்

ஸஹஸ்ரே என்றதிலும் ஸ்வாமி தேசிகன் தெரிவித்தார்.

'ஸேவாயோக்யத்வம்' - இவனே பூஜிக்கத்தக்கவன் துடக்கமாக ஸுதகத்திற்கு ஒரு குணமாக பத்து குணங்களாகவும், பின்னர் அவற்றையும் விவரித்து நிஸ்ஸீமோத்யத்குணத்வம் – அளவற்ற கல்யாணகுணங்களை உடைமை) துடங்கி ஒவ்வொரு ஸுதகத்திலும் பத்து பத்து குணங்களாக ஆழ்வார் அருளிச்செய்ததை எடுத்து விவரித்தார் ஸ்வாமி தேசிகன்..

அவதரித்த காலத்திலேயே அகஞானத்தைக கொண்டு ஞானத்தை மறைத்துவிடும் "ஸடம்" என்கிற ஒரு வாயுவிஸேஷத்தை வென்று, பரமபுருஷார்த்தமான பகவத்குணானுபவத்தை கைக்கொண்டதால் "ஸடரிபு, ஸடாரி, ஸடகோபன்" என்றெல்லாம் கொண்டாடப்படுகிறார் நம் ஆழ்வார்.

இவரால் அருளப்பட்ட ஸ்ரீஸூக்தி-களோவென்னில், ஸாரஸ்வதானாம் ஸார: - வேதங்கள் மற்றும் அதன் மூலமான ஸாஸ்த்ரங்கள் இவற்றின் ஸாரமே திருவாய்மொழியாம்.

ஸாந்தி ஸுத்தாந்தஸீமா - ஸாந்த: ஷடூர்மிரஹித: - அறுவகை துன்பங்களற்று இருப்பதே ஸாந்தம்) என்றது ஸாஸ்த்ரம்.

ஸம்ஸாரத்திலிருக்கின்ற தாபங்களான பிறப்பு, இறப்பு, பசி, தாகம், பிணி, மூப்பு ஆகிற துன்பங்களிருந்து விடுபட்டு ஜிதேந்த்ரியர்களாக (புலன்களை வென்றவர்களாக) இருக்கக்கூடியவர்களின் ஸாந்திக்கு எல்லைநிலமாக இருந்து பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடியது திருவாய்மொழி.

பூர்வாசார்யர்கள் காட்டினவழியில் திருவாய்மொழியை அனுஸந்தித்துக் கொண்டிருப்பவர்களின் ஸாந்திக்கு எல்லையில்லை என்றபடி.

மாயாமாயாமநீபி...

பகவதனுபவத்திலிருந்து விலக்கி ஸம்ஸார பந்தத்திலேயே கட்டிவைக்கக்கூடிய, வளர்ந்து கொண்டேயிருக்கிற ஸத்வ ரஜஸ் தமஸ்ஸாகிற முக்குணமாயையை ஒரு துளியும் மீதமில்லாமல் அழித்து-விடக்கூடியது இந்த திருவாய்மொழியாம்.

பாரம் பாரம்பரீத...

பவஜலதி பவன்மஜ்ஜனானாம் ஜனானாம்) பரம்பரையாக வந்துகொண்டேயிருக்கிற ஸம்ஸாரத்திலேயே மூழ்கியுள்ளவர்களை அந்த கோரமான பவக்கடலைக் கடத்தி அக்கரையை அடைவிக்கக்கூடியது.

ப்ரத்யக் ப்ரத்யக்ஷயேன்ன...

நாமே அறியாமல், நமக்குள்ளேயே ஹ்ருதயகமலத்தில் 'கண்கள் சிவந்து பெரியவாய் ... ... ஒண்சங்கதை

வாளாழியானொருவன் அடியேனுள்ளானே" (திருவாய்.8.8.1) என்றபடி ஸ்ரீவைகுண்டவாஸனான ரூபத்துடன் நம்முள் இருக்கிறான் எம்பெருமான்.

இதையே கடவல்லியில் "அங்குஷ்டமாத்ர புருஷ: மத்யே ஆத்மநி திஷ்டதி; ஈஸானோ பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே" –ப்ரபஞ்சத்திற்கே ஈஸ்வரனாயும் கட்டைவிரல் அளவு-ள்ளவனாயும் இருக்கும் புருஷன் ஸரீரத்தின் மத்யத்தில் இருக்கிறான்.

அவன் ஈஸ்வரனாயிருப்பதால் ஸரீரத்தில் உள்ள தோஷங்களைக் கண்டு அருவருப்படைவதில்லை) என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட எண்ணற்ற கல்யாணகுணங்களுடன் நம் ஹ்ருதயத்தில் ஹார்தனாக இருக்கும் ஸத் ஸம்பத்வாச்யனான பரமாத்மாவை நமக்கு ப்ரத்யக்ஷமாக காட்டவல்லது ஆழ்வாரின் ஸ்ரீசூக்திகள்..

ப்ரதிநியத ரமாஸந்நிதானம் நிதானம்..

பெருமாள் பிராட்டியோடு சேவை ஸாதிக்கும் ஸ்தானங்களுள் மிகவும் முக்யமானவை மூன்று (1) வேதங்கள்; (2) யோகிகளுடைய ஹ்ருதயம்; (3) திருப்பாற்கடல்.

முன்னொருகால் பகவான் பாதராயனர் உபநிஷத்துக்களாகிற பாற்கடலைக்கடைந்து ப்ரஹ்மசூத்ரங்களாகிற அம்ருதத்தை வெளிக்கொணர்ந்தார் என்பதை எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் "பாராஸர்ய வச: ஸுதாம் உபநிஷத்

ஸ்ரீ அஹோபிலம் சேர்த்தி உத்ஸவம்

ஸ்ரீ ஆதிவண் ஸடகோப ஸ்வாமி

துக்தாப்தி மத்யோத்ருதாம்" என்று காட்டினார்.

திருவாய்மொழியோவென்னில், "ஶடஜித் உபநிஷத்துக்தசிந்து" திருவாய்மொழியாகிற பாற்கடலைக்கடைந்து ஒவ்வொரு பதிகத்திலிருந்தும், ஶதகத்திலிருந்தும் பகவத் கல்யாணகுணங்களாகிற ரத்னங்களை எடுப்பதாகக் கூறுகிறார் ஸ்வாமி தேஶிகன் அடுத்த ஶ்லோகத்தில்.

அஸ்மதாசார்யன் திருவடிவாரத்தில் யதாமதி க்ரஹித்ததில் ஓரளவு விக்ஞாபித்தேன். பிழைகளைப் பொறுத்தருள ப்ரார்த்தி-க்கிறேன்.

ஆழ்வார் எழுந்தருளியிருந்த புளிய மரம், ஆழ்வார்திருநகரி

◇◇◇◇◇◇◇◇

- அயிந்தை அமுதன்

திருவள்ளூர் ப்ரஹ்மோத்ஸவம்

சேஷ வாஹநம்

குதிரை வாஹந சாத்துப்படி

பூரணன் தந்த பூரிப்பு

நம்மாழ்வார் என்றும் போல் அன்றும் எம்பெருமானை தியானம் செய்து, ஆழ்ந்த அனுபவத்தில் திளைத்திருந்தார். திருமகள் உறை மார்பனின் திவ்ய திருமேனியைத் தியானித்தவருக்கு என்றும் இல்லாத ஓர் உணர்வு உண்டானது.

உலகத்தைப் போல் தன் நெஞ்சமும் பெருத்து விடுவது போல் உணர்ந்தார். அதாவது, பூரணனாகிய பெருமாளை நினைக்கத் தொடங்கியவுடன், உருவமுடைய தேகத்தைப் போல், உருவமில்லாத அவருடைய நெஞ்சம் பூரிப்படைவதை உணர்ந்தார். பூரித்த அந்த நெஞ்சம் எங்கும் விரிந்து பரந்து இருப்பதையும் உணர்ந்தார்.

பொதுவாக பெருமாளுக்கு நீக்கமற எங்கும் பரவி, நிறைந்து, விரிந்து கலந்திருக்கும் தன்மை உண்டு. பரமபதத்தில் வசிக்கும் நித்ய - முக்த ஜீவன்களுக்கு, அறிவினால் எங்கும் விரிந்து விளங்கும் தன்மை உண்டு.

ஆனால் ஆழ்வார் இந்த பூவுலகில் பெருமாளை தியானம் செய்யும் பொழுதே, நெஞ்சம் பூரிப்படைவதையும்,தான் பெருத்து விடும் உணர்வையும், எங்கும் நீக்கமற கலந்திருக்கும் நிலைமையையும் உணர்ந்தார்.

அணு ஸ்வரூபமாக இருக்கும் ஜீவனுக்கு இந்த உணர்வு எப்படி சாத்தியம் என்று ஆழ்வாருக்குப் புதிராக இருந்தது.

பரமபதத்தில் வசிக்கும் ஜீவன்கள் பெறும் அனுபவத்தை, ப்ரக்ருதி மண்டலத்தில் தான் அனுபவிப்பதை நினைத்து வியந்தார். அதன் காரணத்தை அறிய ஆசை பூண்டார்.

அப்பொழுது ஒரு ஆச்சர்யம் நிகழ்ந்தது. பகவானை த்யானம் செய்யச் செய்ய ஆழ்வாரின் பாபக் கூட்டமான வினைகள் யாவும் விலக, பெருமாளின் கடாக்ஷத்தினால் அவனைக் காணும் பெரும் பாக்கியத்தைப் பெற்றார்.

எம்பெருமானையே தன் கண் முன் கண்டவுடன் மகிழ்வுற்ற ஆழ்வார், பெருமாளிடம் "பெருமாளே! உன்னை தியானம் செய்ய என் நெஞ்சம் பூரிப்படைந்து, இந்த உலகத்தை போல் நானும் பெருத்திருக்கிறேன். அது எப்படி முடியும் என்று நீயே சொல்!" என்று வினவினார்.

பின்னர் ஆழ்வாருக்கு புரிந்தது, தான் தியானம் செய்தது உலகளந்த திரிவிக்ரமனை என்று. உலகுக்கு மூல காரணமான பகவான், ஒரு கணமும் தன்னை விட்டு அகலாமல் திருமார்பில் வீற்றிருக்கும் பிராட்டியையும், சக்கராயுதத்தை வலது கையிலும், சங்கத்தை இடது கையிலும் தரித்த திரிவிக்ரமனை, தன்

உள்ளத்தில் ஆழ்வார் தரித்தார்.

வாமன வடிவில் வந்தவன், மூவடி மண் வேண்டி, உலகம் முழுவதும் சூழ்ந்து கொள்ள விரும்பி, திருவிக்ரமனாய் தாண்டவம் புரிந்த படி ஏழு உலகங்களையும் ஒரு கரு மேகம் சூழ்ந்தது போல் நின்றதை தன் நெஞ்சினுள் நெகிழ்ச்சியுடனும், ஆச்சர்யத்துடனும் அனுபவித்தார்.

பெருமாள் தன் திருவடிகளால் உலகங்கள் யாவும் வியாபித்து இருப்பதைப் போல், தன் நெஞ்சும் எங்கும் வியாபித்து விளங்குவதை ஆழ்வார் அனுபவித்தார்.

ஸத்யலோகம் சென்ற அந்த திருவடியை, சதுர்முகன் தன் கமண்டல தீர்த்தத்தினால் திருமஞ்சனம் செய்ய, அந்த தீர்த்ததாரை கங்கையாகப் பெருகியதை நினைத்த ஆழ்வாரின் உள்ளத்திலும் அனுபவ ப்ரவாஹம் பெருகியது.

பெண்ணை ஆற்றின் கரையில், மிருகண்டு முனிவர் ஆச்ரமத்தில், முனிவருக்கு ஒரு பச்சிலை மரம் போல் குளிரக் காட்சியளித்த திரிவிக்ரமனை ஆழ்வார் தன் நெஞ்சம் என்னும் அரண்யத்தில் வசிப்பதைக் கண்டு மனம் குளிர்ந்தார்.

திரிவிக்ரமனின் ஸ்வரூபத்தையும், ஸ்வபாவத்தையும், குணங்களையும் தியானித்த ஆழ்வார், திருவிக்ரமனையே தன்னுள் உணர்ந்தார்.

தான் அனுபவித்த அந்தர்யாமியின் வ்யாப்தியைப் பற்றி பெருமாள் தான் விளக்க வேண்டும் என்று பெருமாளையே இந்த பாசுரத்தில் கேள்வி கேட்கிறார்.

உள்ளிலும் உள்ளந் தடிக்கும்
வினைப்படலம்,
விள்ள விழித்துன்னை
மெய்யுற்றால்,-உள்ள

உலகளவு யானும் உளனாவன் என்கொல்,
உலகளந்த மூர்த்தி உரை.

ஆம், ஆழ்வாருக்குள் இருக்கும் அந்தர்யாமி, திரிவிக்ரமன் திருமேனியில் இருந்ததால், அந்த திருமேனிக்கு ஏற்றார் போல் ஜீவனான ஆழ்வாருக்கும் வ்யாப்தி உணர்வு ஏற்பட்டது. இதையே ஆழ்வாரும் அனுபவித்தார். என்னே ரசமான அனுபவம்!

◇◇◇◇◇◇◇

- தாசன் ஸ்ரீனிவாசன்

யமனுக்கு யமன்

- அனந்தன்

யமன் என்றாலேயே எல்லோர்க்கும் உள்ளூர ஒரு பயமுண்டு. அவன் நமக்கு கொடுமையான தண்டனையளிப்பவன்.

யமவேதனை என்று நரகங்களில் ஜீவாத்மாக்கள் அனுபவிக்கும் பல விதமான துக்கங்கள் காட்டப்படுகின்றன.

"நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்" என்று ஆழ்வார்களின் அருளிச் செயல் வாயிலாக யம லோகத்தின் கொடுமைகளை அறிகிறோம். சூர்யனுக்கு ஸுவர்ச்சலா எனும் மனைவியிடம் பிறந்த இருகுழந்தைகளுள் ஒருவன் யமன். மற்றொருவள் யமுனா எனும் நதி என்பது புராணம்.

அதனால்தான் தேசிகனும் கோபாலவிம்சதியில் "தினகரஸுதா" சூர்யனின் பெண் என்கிறார் யமுனையை.

இனி யமனைக்கண்டு யார் நடுங்குவர்? அல்லது யமன் யாரைக்கண்டு நடுங்குவான் என்பது காணலாம்.

முன்னமே சொன்னபடி பாபங்கள் செய்தவர்களுக்கன்றோ யமனிடம் பயம் உண்டாகும். சங்கர பகவத் பாதர் தனது நரசிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரத்தில் யம கிங்கரர்கள் செய்யும் கொடுமையை வர்ணிக்கிறார்.

"நரகத்துக்கு கழுத்துப்பிடரியில் கைவைத்துத் தள்ளிக்கொண்டு போவார்களாம் அந்த பயங்கர கிங்கரர்கள். கூரான சவுக்கு, சூலம், பாசம் போன்றவை கொண்டு கட்டியும், அடித்தும் நம்மை இழுத்துச் செல்வார்களாம்.

அடி, உதை, துன்புறுத்தல் என அந்த கொடுமைகளை வாய்விட்டுச் சொல்லவே பயங்கரமாக உள்ளது. "நமனார் செய்யும் கொடுமை" என்கிறார் திருமங்கையாழ்வார். யமன் என்பதே இங்கு நமன் என்றுள்ளது.

ரௌரவம், அஸிபத்ரம், க்ருமி-போஜனம், கும்பீபாகம், வசாகந்தம் என பலபலவே நரகங்கள் உண்டு. பெண்களை ஆசைப்பட்டு கெடுத்தவனின் நிலையை " எரியெழுகின்ற செம்பினாலி என்ற பாவையைத் தழுவு" என யமன் கிங்கரர்கள்; கொள்ளிக்கட்டை போன்று கொதிக்கும் செப்பினால் ஆகிய பெண் பதுமையை தழுவச் செய்வாராம்.

இப்படியாக பாவங்கள் செய்பவர்கள் யமனைக்கண்டும், அவனின் தண்டனை-களைக் கேட்டும் பயந்து நடுங்குவர். ஆனால்

எம்பெருமான் அடியார்களின் கதை வேறு.

ஒரு சமயம் கூரத்தாழ்வானிடம் ஒருவர் கேட்டார் , *"ப்ரஹ்ம , ருத்ரன், இந்த்ரன் முதலிய தெய்வங்களைக் கண்டால் ஸ்ரீ வைஷ்ணவன் எப்படி இருக்க வேண்டுமென்று?* அதற்கு ஆழவான் பதில் கூறினார், " ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் மற்ற தெய்வங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று கேள்வியை மாற்றுங்கள்" என்றார்.

ஏனெனில் ஸ்ரீ வைஷ்ணவரைக் கண்டு ஏனைய தெய்வங்கள் வணங்குகின்றன என்பது பிரமாணம். மேலும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், " தன்கிங்கரர்களை அழைத்து யமன் சொல்லும் ரகசியம் மிகவும் ப்ரசித்தம்.

"ஏகிங்கரர்களே, மதுசூதனன் அடியார்களிடம் நெருங்காதீர்கள். என்னைக் கண்டு உலகம் பயப்படுகிறது. நம் அவர்களைக் கண்டு நடுங்குகிறேன். நான் வாசுதேவ பக்தர்களுக்கு தலைவன் அல்லன்" என்கிறான்.

திருமாலை முதலிய ப்ரபந்தங்களில் *"யமன் தலையில் காலை வைப்போம்"* என ஆழ்வார்களும் அறுதியிடுகின்றனர் துருவன் யமன் தலையில் காலை வைத்து விமானம் ஏறினான் என்கிறது பாகவதம்.

சுவாமி தேசிகனும் அபிதிஸ்தவத்தில் *"யம பயமோ, நரக பயமோ இல்லை நமக்கு"* என்கிறார்.இதுவரையில் *"யமன்"* என்பவனின் பொது குணங்களைக் கண்டோம். இனி *"யம"* என்பதற்கு விசேஷார்த்தங்களைக் காணலாம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் இரண்டிடங்களில் "யம: என்று வருகிறது. *164*வது திருநாமத்தில் முதலில் வ்யாக்யானம் செய்யும் போது *" ஆள்பவன்" - அந்தர்யாமியை உள்ளிருந்து நியமிப்பவன்.*

ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீவில்சிர் ஆற்றல் மிக்காரும் அம்மானை என்று பட்டர் பொருள் உரைக்கிறார். சங்கர, மத்வ பாஷ்யங்களும் இதையே சொல்கின்றன. பின்னர் மீண்டும் *870* வது திருநாமத்திற்கு பொருளுரைக்கும் போது *"பலன் பெறுவதற்காக மற்றவர் பூஜிக்கும் தேவதைகளையும் நியமித்து நடத்துபவன்"* என்று பொருள்.

"யமனாகிய என்னையும் நியமிப்பதால் விஷ்ணுவே யமன்" என்று யமனே சொல்லும் விஷ்ணுபுராண வாக்யம் காட்டப்படுகிறது.

சங்கர பாஷ்யத்தில் *"அயம:"* என்று ஒரு பாடம் கொண்டு" யமபயமற்றவர்" என்றும் *"யம:"* என்றாலும் சர்வ நியந்தா எனும் பொருள் சொல்லப்படுகிறது.

மாத்வ பாஷ்யத்தில் *872*ம் திருநாமமான இதற்கு கீதை ப்ரமாணமாகிறது.

அதாவது *"தண்டிப்பவர்களிடையே யமன் நான்* எனும் பத்தாம் அத்யாயத்தைக் கொண்டு பொருள் கூறப்படுகிறது. இதையெல்லாம் நன்கு ஆராய்ந்தால் "யமன்" இங்கு பரமாத்மாவே.

மேலும் :

யமோ வைவஸ்வதோ ராஜா
யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: |
தேன சேத் அவிவாதஸ்தே
மாகங்காம் மா குரூந்கம ||

(மனு.6-92)

(ஹ்ருதயத்திலுள்ள யம எனும் பரமாத்மாவை நன்கறிந்தவன் கங்கைக்கோ, குருக்ஷேத்ரத்திற்கோ வேறெங்கும் செல்ல வேண்டாம்)

அதாவது ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவான எம்பெருமானை தன்னுளே கண்டவனுக்கு க்ஷேத்ராடனம் ஏதும் தேவையில்லை என்பது பொருள்.

உபநிஷதங்களும் *"ம்ருத்யு யஸ்ய உபஸேசனம்"* என்பதால் ம்ருத்யு- யமனைக் கொண்டு உலக ஸம்ஹாரத்தைச் செய்யும் பகவான், சாப்பாட்டில் ஊறுகாயைப் போன்று முடிவில் அவனையே உண்கிறான்" என்று காட்டுகின்றன.

மந்த்ரராஜபத ஸ்தோத்ரத்தில் பரமசிவன் ஸ்ரீ நரசிம்ஹனை *"ம்ருத்யும்ருத்யு"*- யமனுக்கு யமன் என்று கொண்டாடுகிறான். ம்ருத்யும்ருத்யுவான நரசிம்மனை சரணடைந்து யம பயம் அற்றவர்களாகலாம்.

◇◇◇◇◇◇

பிள்ளைப்பாக்கம்
ஸ்ரீமதழகியசிங்கர் திருநக்ஷத்ரம் -
ஸ்ரீபெரும்புதூர் - மாசி புஷ்யம்.

திருவள்ளூர் ப்ரஹ்மோத்ஸவம்

கருட வாஹநம்

விஜயகோடி விமான ஸேவை

கானகத்தில் பெற்ற கனி விருந்து

நாரத முனியின் ஆசியுடனும், நான்முகனாம் ப்ரஹ்மதேவரின் அருளினாலும், வாக் தேவியின் அனுகிரஹத்தினாலும் வால்மீகி பகவான் ஆதி காவ்யமான ராமாயணம் இயற்றினார். மஹாவிஷ்ணு ராமனாக அவதரித்த பொழுது, வேதம் ராமாயணமாக பிறந்தது.

ஆகையால், ராமாயணம் முழுக்க வேத நெறியை நமக்கு *Practical* ஆக விளக்குவதே ஆகும். இதில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் நமக்கு வாழ்க்கை நெறியை போதிக்குமாறு அமைந்துள்ளதே ஸ்வாரஸ்யம்.

அப்படிப்பட்ட வாழ்க்கை நெறியை போதிக்கும் சபரீ என்னும் ஓர் அற்புத கதாபாத்திரத்தின் அருமை பெருமையினையும், அவள் ராமனுக்கு எப்படி பெருமையை சேர்த்தாள் என்பதனையும் காணலாம்.

சீதையை தேடி:

சபரீ என்னும் வேடுவ பெண்மணி மதங்க முனிவரின் சிஷ்யை. ஆசார்யனுக்கு கைங்கர்யம் செய்வதையே தன் வாழ்க்கை நெறியாகக் கொண்டு ஆஸ்ரமத்தில் வாழ்ந்து வந்தாள்.

மதங்க முனிவர் இந்த பூவுலகம் விட்டு கிளம்பும் முன், சபரீயிடம் ராமனின் வரவுக்கு காத்திருக்குமாறும், அவர் வந்ததும் அவருக்கு அதிதிஸத்காரம்(விருந்தோம்பல்) செய்த பின்னர் மோக்ஷம் வந்து சேருமாறு உத்தரவிடுகிறார்.

வயதான சபரீயும் ராமனின் வரவை நோக்கி உலர்ந்த பழ வகைகளை அவருக்காக ஆசையுடன் சேமித்து வைத்து காத்திருந்தாள்.

மதங்க முனிவரின் வாக்கினால் ராம - சபரீ ஸமாகமம் (சந்திப்பு) முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிகிறது.

நேராக ஸுக்ரீவனிடம் செல்லாமல் சபரீ இருக்கும் வழியாக செல்லுமாறு கபந்தன் கூறியது, ஸுக்ரீவ ஸமாகமத்தை(சந்திப்பு) விட சபரீ ஸமாகமம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெளிவாகக் காட்டுகிறது.

சபரீ என்னும் புண்யவதி:

வால்மீகி கபந்தன் கூற்றாக "தர்மசாரிணீம், ச்ரமணீம், தர்மநிபுணாம்" என்று சபரீயை போற்றுகிறார்.

தர்மசாரிணீம் என்றால் குருசுச்ருஷை என்ற தர்மத்தை அனுஷ்டிப்பதை ஸ்வபாவமாக கொண்டவள் என்று பொருள். தர்மத்தில் சிறந்தது, எல்லை நிலம் ஆசார்ய கைங்கர்யமே ஆகும்.

தர்மநிபுணாம் என்றால் அதிதியை ஆராதிப்பது எவ்வாறென்பதை நன்கு அறிந்தவள் என்று பொருள். மேலும் ஆசார்யரின் அபிமானம் பெற்றவள் என்றும் பொருள்.

பெருமாளை ஆஸ்ரயித்தவனுக்கு மோக்ஷம் கிடைக்குமா என்ற கேள்வி கூட எழலாம், ஆனால் ஆசார்யனை ஆஸ்ரயித்தவனுக்கு மோக்ஷம் கண்டிப்பாக கிடைக்கும். இந்த ஆசார்ய அபிமானமே சபரீக்கு மோக்ஷம் அடையும் நற்கதிக்கு வழியாக அமைந்தது.

ஏதோ ஒரு முற்பிறவியில் பக்தியோகம் ஆரம்பித்த சபரீ, இப்பொழுது வேடுவ ஸ்திரியாக தன் கடைசி பிறவியில் மோக்ஷம் அடைந்தாள் என்றும், ஒன்றும் அறியாத சபரீக்கு ஆசார்யன் செய்த ப்ரபத்தியின் மூலம், மோக்ஷம் கிட்டியதும் என்றும், பெரியோர் இருவிதமாக ரஸமாக பொருள் கூறுவர்.

எப்படி இருப்பினும் ஆசார்ய அபிமானத்தின் மகிமையை தெளிவாக கூறுகிறது சபரீயின் மோக்ஷம்.

வேடுவ ஜாதியை சேர்ந்தவள் சபரீ. சபர ஜாதியின் தொழில் மரங்கலிளிருந்து தேன், பழம் முதலான இனிய வஸ்துக்களைக் கொண்டு அதிதி ஸத்காரம் செய்வதாகும். "இனிய பழங்களா?" என்று பார்த்து பார்த்து ராமனுக்காக சேர்த்து வைத்திருந்தாள்.

"இனிதா?" என்று பரீக்ஷை செய்வது என்றால் ஒவ்வொரு பழத்தையும் வாயினால் கடித்து, சிறிது உண்டு மற்ற பாகத்தை வைத்திருந்தாள் என்று கூறுவது தவறு, ஏற்கத்தக்கதன்று. வெகு காலமாக மதங்க முனிவருக்கு குருசுச்ருஷை என்னும் தர்மத்தை கடைபிடித்தவளுக்கு எந்த பழம் நல்ல பழம் என்று அறிவதில் தேர்ச்சி உண்டு.

மேலும் குருவிடம் கற்றவர்கள் ஆசாரத்தில் குறை வைக்க மாட்டார்கள். ஆகையால், தன் அனுபவத்தினால் நல்ல பழங்களை சேகரித்து வைத்தாளே தவிர, சாப்பிட்டு

பார்த்து வைக்கவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

ஆசாரம் & ஆரோக்கியம் நிறைந்த *Dry fruits* என்னும் உலர்ந்த பழங்களை உண்ணும் கலாசாரத்தை *introduce* செய்ததே சபரீ *Kitchen* தான் போலும்.

சரமணீம் என்றால் வைராக்ய ஆச்ரமத்தை மேற்கொள்பவள் என்று பொருள். ஸன்யாஸ்ரமம் என்பது வைராக்கியம் நிறைந்த ஆஸ்ரமம் ஆகும். ஸந்யாஸிகளை போல் வைராக்கியத்தில் சிறந்து விளங்கியவள் சபரீ.

சபரியால் நன்கு பூஜிக்கப்பட்ட பெருமாள்:

சக்கரவர்த்தி திருமகன் ராமன் தசரதர் காட்டிய பரிவை விட மேலான பரிவை சபரீயின் விருந்தோம்பலில் கண்டார்.

ஆகையால் சாதாரண வேடுவச்சி செய்த பூஜையே சிறந்த பூஜை, அதாவது ஸம்யக்கான பூஜை.

பரத்வாஜர் ஆஸ்ரமத்தில் வைதீகனாக சாப்பிட்ட அதே ராமன், இங்கு பாசம் மற்றும் பரிவுடன் சபரீ கொடுத்ததை லௌகீகனாக *fast food* சாப்பிட்டு சந்தோஷமடைந்தார்.

ராமனே எங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிந்து செயல் பட்ட சிறந்த வைதீக லௌகீகன்.

மேலும் *"வேடுவ ஜாதியான சபரீ எப்படி ராமனை பூஜிக்கலாம்?"* என்று கேள்வி வரும். இது ராமனின் சௌலப்ய சௌசீல்ய குணத்தின் எல்லை என்றே கூறலாம்.

முதலில் வேடுவர்கள், ரிஷிகள் என்று மனிதர்களுடன் சகவாசம் செய்த ராமன், பின்னர் குரங்கு, கரடி ராக்ஷஸர்கள் என சகவாசம் செய்தான். இந்த இரு வகுப்பினருக்கும் நடு நாயகமாக அமைந்தது சபரீ ஸமாகமமே ஆகும்.

இதை விளக்கும் வகையிலேயே ஸ்வாமி தேசிகன் *"நிஷாதானாம் நேதா கபி குலபதி: காபி சபரீ"* என்றார். வேடுவ தலைவன் குகன், குரங்குகளின் தலைவன் சுக்ரீவன் இருவரையும் முதலில் குறிப்பிட்டு, உயர்ந்த சபரீயைக் கடைசியில் கூறியுள்ளார் தேசிகன்.

குகனும் ஸுக்ரீவனும் வேடுவ ஜாதி, குரங்கு ஜாதியினர் ஆயினும் அவர்கள் அரசர்கள் என்பதால் அவர்கள் ராமனுடன் சேர்வது சரி என்று கூறலாம்.

சபரீயின் ஸமாகமத்தை ஏன் போற்றுகிறோம் என்றால், எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாத சபரீயின் அன்பினை கண்டு ராமனுக்கு அவள் மீது அளவு கடந்த பாசம் உண்டானது.

இதனால் தான் தேசிகன் சபரீயை "காபி சபரீ" என்கிறார். "காபி" என்பது உயர்ந்தவள், அத்விதீயம் அதாவது தன்னை போன்று மற்றோருவர் இல்லாதவள் என்று போற்றுகிறார். ஆகையால் தான் சபரீயின் ஸமாகமம் போற்றப்படுகிறது.

மேலும், பிராட்டியை பிரிந்து மனச்சோர்வில் இருந்த ராமனுக்கு, புண்யவதி சபரீயின் தரிசனம், முனிவரின் ஆஸ்ரமத்தில் சற்று இளைப்பாறியது, மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவியது, இன்பம் அளித்தது என்று ராமன் கூறும் வாக்கிலிருந்தும் தெரிகிறது.

ஆகையால் சபரீயை சந்தித்து, அவள் பூஜை செய்ததினால், அவள் பூஜையை ஏற்ற ராமன் நன்றாக பூஜிக்கப்பட்ட ராமன் என்று போற்றப்படுகிறான்.

அயோத்யாவாசிகள், வேடுவன் குகன், ஆரண்யத்தில் சுதீக்ஷணர், சரபங்கர் போன்ற மஹரிஷிகள் என பலர் பூஜை செய்த போதிலும் ராமனாக இருந்தவன் உயர்ந்த சபரீயின் பூஜையினால் நன்றாக பூஜிக்கப்பட்ட ராமன் என்று போற்றப்படுகிறான்.

சபரீ ஸமாகத்தின் முக்கியத்துவம்:

1. "ராமனுக்காக காத்திரு" என்ற மதங்க முனிவரின் வாக்கினால் ராம - சபரீ ஸமாகமம் (சந்திப்பு) முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிகிறது.

2. ஸுக்ரீவ ஸமாகத்தை விட சபரீ ஸமாகமம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது கபந்தன் கூறிய வார்த்தையிலும் தெரிகிறது.

3. ராமனுக்காகவே காத்துக்கொண்டிருக்கும் சபரீ என்ற புண்யவதியை காணாமல் ராமன் ஸுக்ரீவனிடம் நேராக சென்றால், அது மனித ரூபத்தில் இருக்கும் ராமனுக்கு பெரும் குற்றமாக, சீதையை தேடும் கார்யத்திற்கு தடையாகும். சபரீயை சந்திப்பது ராமனுக்கு புண்யமாகும். சீதையை தேடுவதில் கார்ய ஸித்தி கிடைக்கும். ஆகையால் இந்த சந்திப்பு முக்கியமானது.

4. ஈஸ்வரனான ராமன் தன் பக்தர்களை சந்திப்பதும், அவர்களை ரக்ஷிப்பதும் அவதார நோக்கு என்பதால் சிறந்த பக்தியுடன் விளங்கும் சபரீயை சந்திப்பது முக்கியமானது.

5. ராமன் சபரீயை மரியாதையுடன் அணுகி, சந்தித்ததினால் மஹாதேஜஸ் பெற்று, சத்ருவை அழித்தவரானார் என்று நாரதரும் போற்றுகிறார்.

6. சபரீ செய்த தவத்தின் பலனாக பெருமாளை நேரில் கண்டாள். "உம்மை நேரில் கண்டதால் என் தவம் பலித்தது. உனது அனுகிரஹத்தினால் அழியாத உலகங்கள் செல்வேன்" என்று சபரீ கூறுகிறாள். சபரீக்கு பலன் அளிக்கும் இந்த சந்திப்பு மிகவும் முக்கியமானது.

7. ராமனைக் காண்பதால் அக்ஷய லோகம் பெறலாம் என்பதை சபரீக்கு ஆசார்யர்களும் கூறியுள்ளனர். பகவான் என்றும் ஆசார்யர்கள் வாக்கு பலிக்கும் படியே செய்வான். ஆகையால், சபரீயை சந்திக்க ஆவலாக சென்றான்.

8. ராமன் ஜடாயுவிற்கு மோக்ஷம் அளித்தார். ஆனால் இங்கு ஆசார்ய

அபிமானத்தினால் மோக்ஷம் அடையும் சபரீ, மோக்ஷம் செல்ல ஸாக்ஷியாக ராமன் நின்றான். மோக்ஷத்திற்கு அதிபதியான பரம்பொருளான ராமன் ஸாக்ஷிபூதனாக இருக்க உதவியது இந்த சந்திப்பு.

9. மேலும், பிராட்டியை பிரிந்து மனச்சோர்வில் இருந்த ராமனுக்கு, புண்யவதி சபரீயின் தரிசனம், முனிவரின் ஆஸ்ரமத்தில் சற்று இளைப்பாறியது, மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவியது, இன்பம் அளித்தது என்று ராமன் கூறும் வாக்கிலிருந்தும் தெரிகிறது.

10. இவை எல்லாவற்றை காட்டிலும் மிகவும் முக்கியமான காரணம் என்ன-வென்றால், சபரீயை சந்தித்து அவள் பூஜை செய்ததினால், அவள் பூஜையை ஏற்ற ராமன் நன்றாக பூஜிக்கப்பட்ட ராமன் என்று போற்றப்படுகிறான் என்பதேயாகும்.

11. உயர்ந்த புண்யவதி சபரீயை சந்தித்த பின்னரே ராமனுக்கு ஹனுமனை சந்திப்பது, சுக்ரீவனுடன் நட்பு, சீதையை ஹனுமன் கண்டுபிடித்தல், உயர்ந்த விபீஷண சரணாகதி, சேது பந்தனம், ராவண வதம், லக்ஷ்மிஸமேதனாக மீண்டும் அயோத்தி சென்று ராமராஜ்ஜியத்தை ஸ்தாபித்தல் என்று அனைத்து மங்களங்களும் உண்டாகின. உயர்ந்த பாகவத தரிசனம் அனைத்து நன்மையையும் செய்யுமன்றோ.

இவ்வண்ணம் சௌசீல்ய ராமனும் சீலம் நிறைந்த சபரீயும் சந்தித்த இந்த சந்திப்பு மிகவும் போற்றத்தக்கது. இந்த நுணுக்கமான அர்த்தவிசேஷங்கள் அபிநவ தேசிகன் உத்தமூர் ஸ்வாமியின் தீர்வானங்கள் காணபடுகிறது.

- வெங்கடேசன் திருநெல்வேலி

ஆச்ரம ஸ்வீகார திநம் திவ்யதேச மரியாதைகள்

மஹாபாரதம் கூறும் நல்லுபதேசம்- 10

மார்க்கண்டேயரின் சரிதம்

திருப்புல்லாணி ஸ்ரீநிவாஸன், சென்னை- 91

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயம் உதீரயேத் ||

புருஷோத்தமனான நாராயணனையும், நரனையும், வாக்தேவியான ஸரஸ்வதியையும், வியாஸரையும் வணங்கிய பிறகு ஜயத்தை - பாரதத்தைச் சொல்ல வேண்டியது என்பது இந்த ஸ்லோகத்தின் பொருள்.

குறிப்பு - யுதிஷ்டிரரும் பாண்டவர்களும் லோமேசருடன் சேர்ந்து காம்யா வனத்தை விட்டு வேறிடம் செல்ல தீர்மானித்து பற்பல காடுகளைக் கடந்து வழியில் பல ரிஷிகளின் ஆஸ்ரமத்தில் தங்கி கடைசியில் ஒரு வனத்தை அடைந்தனர். தம் மனதினைக் கவர்ந்த அக்காட்டின் அழகையும், அங்கே பூத்துக் குலுங்குகின்ற மலர்களையும், கனி வகைகளையும், ரம்யமான சூழ்நிலையையும் ஆறுகளின் போக்கையும் ரஸித்து யுதிஷ்டிரர் லோமேச முனிவரைப் பார்த்து இது என்ன இடம்? என வினவுகிறார். லோமேச முனிவரின் பதிலை இனிப் படித்து ரஸிக்கவும்.

யுதிஷ்டிரர், "முனிவரே! இது என்ன வனம்? இதில் பல ரிஷிகளுடைய புண்ணியமான ஆச்ரமங்கள் காண்கின்றன. புண்ணியமான இந்த ஆச்ரமம் யாருடையது? தோஷமற்றவர்களான இந்த ரிஷிகள் எவரைச் சார்ந்தவர்கள்? இவற்றை நான் அறிய விரும்புகிறேன்" என்றார்.

லோமசர், 'ராஜச்ரேஷ்டனே! தோஷமற்றவனே! புராதனமான இந்த வனத்தின் வரலாற்றை விரிவாகக் கூறுகிறேன்; உன்னிப்பாகக் கேள். ம்ருகண்டுவின் புதல்-வரான மார்க்கண்டேயர் மஹாமேதாவி; விசாலமான புத்தியுள்ளவர்; எல்லா வித்யைகளிலும் தேர்ச்சி பெற்றவர்.

அவர் தம் சிறு பிராயத்திலேயே தாய் தந்தையருக்குப் பிரியத்தைச் செய்து கொண்டு தவம் புரிவதற்கு வனத்தில் ப்ரவேசித்தார்.

नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् |
देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत्:||

அங்கே ஆச்ரமத்தை அமைத்துக்கொண்டு மிக்க பயங்கரமான தவத்தைச் செய்தார்.

வெயில் காலத்தில் ஐந்து அக்னிகளின் மத்தியில் நின்று தவம் செய்வார். மழைக்காலத்தில் திறந்த வெளியில் இருந்து கொண்டு தபஸ் செய்வார். குளிர்காலத்தில் ஜலத்தில் இருந்து கொண்டு தபஸ்ஸை அனுஷ்டிப்பார். இவ்விதம் நெடுங்காலம் தவத்தில் நிலைபெற்றிருந்தார்.

அவர் கைகளை உயரத் தூக்கிக்கொண்டு பிடிப்பில்லாமல் கால்கட்டைவிரல் நுனியால் நின்று தவம் புரிந்தார். புலன்களை வென்று, சுவாஸத்தை அடக்கி, ஆஹாரமின்றி, கோபதாபங்களற்று, அழிவற்றவனான பரமாத்மாவை அநவரதம் த்யானித்துக்கொண்டு வெகு காலம் தபஸ் செய்தார்.

அரசனே! அப்பொழுது ஒரு ஸமயம் மழையே இல்லாமல் மிகப் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டது. அதனால் சராசரங்கள் எரிந்தன. பலர் நாசமடைந்தார்கள்.

மகாத்மாக்களான சில முனிவர், ப்ராம்மண ச்ரேஷ்டர், க்ஷத்ரியர், வைச்யர், வேளாளர், ஸ்திரீகள், பசுக்கள், பக்ஷிகள், ம்ருகங்கள் முதலிய எல்லாரும் பசியினாலும், தாகத்தினாலும் மிகவும் வருத்தமுற்று, இளைத்து, உதடுகளும் தொண்டைகளும் வறண்டு களைத்தவர்களாய் ஏதோ ஒரு புண்ணிய வசத்தால் மார்க்கண்டேயருடைய ஆச்ரமத்தை மெல்ல அடைந்து மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தனர்.

பாரத ஸமாதி கலைந்தெழுந்த மார்க்கண்டேயர், பசியினாலும், தாகத்தினாலும் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்திய அவர்களைக் கண்டு இரக்கத்தால் இளகிய மனமுள்ளவரானார். ஹ்ருதயகமலத்தில் பரமசிவனைத் தியானித்தார் தவமஹிமையினால், வேத ஸம்பந்தமான ஸ்வரத்தால் கங்கையை அழைத்தார்.

மிக்க பரிசுத்தியுள்ளதும், ''வேதநதி'' என்ற பெயராலேயே ப்ரஸித்தி பெற்றதும், உலகங்களைப் பரிசுத்தமாக்குவதுமான கங்கை அவர் அழைத்தவுடனே விரைவில் அங்கு வந்தது. ராஜேந்திரனே! மார்க்கண்டேயர் நியமித்தவுடனே பர்ஜன்யன் மழை பொழிந்தான். பயிர்கள் செழித்தன. பழங்களும் கிழங்குகளும் மிகுதியாக உண்டாயின. எல்லாரும் காப்பாற்றப்பெற்றனர்.

அரசனே! எல்லாப் பிராம்மணர்களும் மார்க்கண்டேயரைப் பலவாறு புகழ்ந்து கொண்டு அங்கு ஸுகமாக வஸித்தனர். மார்க்கண்டேயர், புண்யாத்மாக்கள் அனைவருக்கும் இவ்வாறு பாதுகாவலைச் செய்து, பரமேச்வரனின் திருப்தியை உத்தேசித்து

மீண்டும் தவம் புரிந்தார். இவ்வண்ணம் பலகாலம் சென்ற பிறகு மகேச்வரர் எதிரில் தோன்றினார்.

பரமசிவன் தேவர்களுக்கும் தேவர்; சந்திரனை முடியில் தாங்கியவர், உமையவளுக்குப் பதி; பிரம்மாதி தேவர், ஸித்தர், வித்யாதரர், உரகர், கந்தர்வர், இயக்கர், கின்னரர் முதலானோரால் அநவரதம் துதிக்கப் பெறுபவர். அழிவற்றவர். எங்கும் நிறைந்தவர்.

அவரைக் கண்ட மார்க்கண்டேயர் பக்தியோடு ஸாஷ்டாங்கமாக அடிக்கடி நமஸ்கரித்தார். நமஸ்கரித்தெழுந்து விரைவாகக் கைகுவித்துக் கொண்டு, உலகங்களுக்கெல்லாம் பதியான மகாதேவரைப் பற்பல ஸ்தோத்ரங்களால் துதித்தார்.

மகாதேவர், 'மார்க்கண்டேய! உனக்கு மங்களம்; வரத்தைக் கேள். வேண்டிய வரத்தைக் கொடுக்கிறேன்! என்றார். மார்க்கண்டேயர், "மகாதேவ! ஸ்வாமி! சம்போ! அடியேனுக்குத் தேவரீருடைய சரணாரவிந்தங்களில் மற்றவர்களால் எளிதில் அடைய முடியாததும், வேறிடத்துச் செல்லாததுமான பக்தியைத் தவிர வேறு வரத்தை நான் விரும்பவில்லை' என்று தழுதழுத்த குரலில் சொன்னார்.

முனிவரின் வார்த்தையைக் கேட்ட பரமசிவன் மறுபடியும் அவரைப் பார்த்துக் கூறலானார். 'மாமுனியே! உன் பிதா புத்திர ஸம்பத்தைப் பெறுவதற்காக என்னை ஆராதித்தார். நான் அவரிடம், 'முனிவரே! உமக்கு நூறு பிராயமுள்ள குணமில்லாத புத்திரன் வேண்டுமா? பதினாறு பிராயமே வாழும் குணசாலியான புத்திரன் வேண்டுமா? இரண்டில் ஒன்றைக் கேளும்' என்றேன்.

"தேவதேவ! நூறு பிராயமுள்ள குணக்கேடனான புத்திரன் எனக்கு வேண்டாம் பதினாறு பிராயம் வாழும் குணசாலியான புத்திரன் எனக்கு இப்பொழுது உண்டாகட்டும்"' என்றார் உன் தந்தை.

மார்க்கண்டேய! நீ செய்த தவத்தினால் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கிறேன். உனக்கு ஏற்பட இருந்த ம்ருத்யுவைத் தடுத்து விட்டேன்' என்று கூறிப் பரமசிவன் அவ்விடத்திலேயே மறைந்தார்.

யுதிஷ்டிர! புண்ணியமான இந்த ஆச்ரமம் அந்த மார்க்கண்டேயருடையது. பாவமற்றவர்களான இந்த ரிஷிகள் அவரைச் சார்ந்தவர்கள். இங்கே ஒரு நாள் வஸிப்பவனுக்கும் மரணபயம் கிடையாது. பரதசிரேஷ்டனே! நீயும் நியமத்துடன் இந்த ஆச்ரமத்தில் வஸி என்று லோமசர் சொன்னார்.



◇◇◇◇◇◇

தனிமையில் இனிமை காணலாம்

- அனந்தன்

உலகை அச்சுறுத்தும் கொடிய வைரசாக கொரோனா அறியப்படுகிறது. பொருளாதாரம், மக்களின் பழக்க வழக்கம், அறிவியல் முன்னேற்றம் என்று ஒட்டுமொத்தமாக வாழ்வியலை நாசம் செய்யும் பயங்கர அரக்கனாக கொரோனா தாக்குதல்.

இதனை எவ்விதம் தடுப்பது அல்லது எவ்வளவு காலம் இதன் தாக்கம் எதிரொலிக்கும் என்பதை அறியமுடியாமல் ஸ்திரத்தன்மையற்ற ஒரு நிலைப்பாடு நிலவுகிறது. அணு ஆயுதங்களையும், ஆட்கொல்லி மருந்துகளை-யும் கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர்கள் அலறித் துடிக்கும் படியாக இதன் தீவிரம் தாண்டவமாடுகிறது.

மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னது போக, தற்போது கிராமம், நகரம், மாநிலம், ஒட்டுமொத்த நாடு என்று தனிமைப் படுத்தப்படுகிறது. ''நாடுகளையும் நகரங்களையும் விட்டு வெளியேற வேண்டாம்'' என்றவர்கள், இன்று ''வீடுகளுக்கு உள்ளேயே முடங்கி இருங்கள்'' என்கின்றனர்.

நோயின் அறிகுறியோ! அல்லது நோய் தொற்று உள்ளவர்களின் சம்பந்தப்பட்டவர்களோ! உடனடியாகத் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது மக்கள் கூடும் இடங்களில் அவர்கள் சேரக்கூடாது, உணவு, உடை, வாழ்க்கை என அனைத்தும் தனியாக இருக்க வேண்டும். அவ்வப்போது நோய் தாக்குதல் குறித்த சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இது கொரோனாவின்

பாதிப்பிலிருந்து மீளும் வழி என்றால், இனி கர்மாவின் பாதிப்பில் இருந்து மீளும் வழி என்ன என்பதைப் பார்க்கலாம்.

தேகத்தின் ஆரோக்கியத்திற்கான வழிகளை தான் மருத்துவர்கள் உபதேசிக்கின்றனர். ஆனாலும் தேகம் எப்படியும் அழியத்தான் போகிறது. என்ன செய்தும் அதை நிரந்தரமாக காக்க முடியாது. ஆனால் ஆத்மா அழியாதது. அதை பாதுகாப்பது நமது இன்றியமையாத கடமை.

இதுவரை இந்து தர்மத்தையும், இந்துக்களை மட்டுமே குறி வைத்து கேலி பேசி வரும் கட்டிபிடி கொள்கையாளர்களும், இந்த கட்டுரையை கவனமாகப் படிக்கவேண்டும்.

இந்த விஷயம் பகவத் கீதையின் பதிமூன்றாவது அத்தியாயத்தில் வருகிறது.

பதிமூன்றாவது அத்யாயம் தேகம், அதன் தலைவனாகிய ஆத்மா என் இருவரின் நிலை குறித்து விவரிக்கிறது. அதாவது வீடு, அதன் யஜமானன் – அதாவது வீட்டுக்காரன் எனும் இருவரின் நிலைப்பாடு இங்கு வர்ணிக்கப்படுகிறது.

எப்படி செங்கல், மணல், ஜல்லி, சிமென்ட் கலவைகளால் வீடு உருவாக்கப்படுகிறதோ அப்படியே நீர், நிலம், காற்று முதலிய ஐந்து திரவியங்களின் சேர்க்கையால் தேகம் உண்டாகிறது.

புயல், மழை, வெயில், பூகம்பம் முதலியவற்றால் உறுதியான வீட்டிற்கு ஆபத்து உண்டாவது போன்று புண்ய, பாப கர்மாக்களால் தேகத்துக்கு நோய், நொடி ஆபத்துக்கள் உண்டாகின்றன.

அப்போது ஆத்மஜ்ஞானி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இங்கு ஏழாம் ச்லோகம் முதல் ஒன்பதாம் ச்லோகம் வரையிலும் ஆத்மஜ்ஞானியின் சுயபரிசோதனை சொல்லப்படுகிறது.

அதாவது ப்ளட், யூரின், மோஷன் என நோய் அறிகுறி அறிய பல டெஸ்ட்கள் எடுப்பது போன்று ஆத்ம குணத்தை அறிய சில பரிசோதனைகளுக்கு உட்படவேண்டும்.

1. கர்வம் கொள்வது
2. வீண் ஜம்பம்
3. ஜீவஹிம்சை
4. மற்றவைகளை துன்புறுத்துவது
5. கபடமாகயிருத்தல்
6. பெரியோரைப் பணியாதது
7. தேகம், மனம் சுத்தமின்மை
8. நாஸ்திக்யம் பேசுதல்
9. மனதை அலை பாயவிடுதல்
10. சிற்றின்பங்களில் ஆசை
11. பேராசை
12. உடலைப் பேணுவதில் விருப்பம்
13. பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணியின் பயங்கரம் அறியாமை
14. உற்றார், உறவினரிடம் அதிகபற்றுதல்
15. அலைபாயும் மனது.

இவை முதலியன பாஸிடிவ் (அதாவது) நம்மை அழிக்கும் நோய் தொற்றுக்காண காரணிகள் (அதாவது) அறிகுறிகள். இவை அனைத்து நெகடிவ் (அறிகுறி இல்லாமை) நோயற்ற சௌக்யத்தைத் தர வல்லவை.

இங்கு ஒரு கேள்வி! இவையனைத்தும் நெகடிவ் என வந்தால் ஆரோக்யமானவன் என்று தானே பொருள். அதன் பின் என்ன பயம்? என்றால் உண்மைதான்.

ஆனால் நோயுள்ளவனிடமிருந்து விரைவாக வியாதிகள் பரவுவது போன்று ஆத்மகுணம் பெற்றவனையும் பீடிக்கும் தொற்று நோய் இந்த துர்குணங்கள். ஆதாவது இதில் ஒன்று தொற்றிக் கொண்டாலும் பாஸிடிவ் (அதாவது) நோய்தாக்குதலின் அறிகுறி உண்டு.

இதனால் ஆரோக்யமானவன் கூட (அதாவது ஆத்மஜ்ஞானம் பூரணமாகப் பெற்றவன்) தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும். ஸர்வேஸ்வரனான எம்பெருமானிடம் பக்தி பூண்டவனாக ஜனத்திரளில் வெறுப்படைந்து, ஜனங்கள் இல்லாத அமைதியான தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தான் ஆரோக்யமானவனாக இருந்தாலும்கூட தனக்கு தொற்றுநோய் வராமல் இருக்க ஆத்மஜ்ஞானியின் தனிமை வாசம் அவசியமாகிறது. ஜடபரதர், ரைக்வர் முதலிய ஆத்மஜ்ஞானிகள் ஏகாந்தமான (தனிமையான) வாசத்தைத்தான் விரும்பினர்.

அன்பர்களே பகவத்கீதை என்பது எக்கால கட்டத்திற்கும் பொருந்தும் சநாதனதர்ம உபதேச நூல். இதிலுள்ள சூட்சுமங்களை குருமுகமாகக் கற்றால் வாழ்க்கையில் மேன்மை பெறலாம். கபடர்கள், நாஸ்திகர்கள், நயவஞ்சகர்கள் இவர்களுடன் நாம் சேருவதால் நமது ஆத்மகுணத்திற்கு ஆபத்து உண்டாகிறது என்பதை அறியவேண்டும்.

அவர்களுடன் பேசுவதைக் கூட (விவாதத்திற்காக) தவிருங்கள் எங்கிறார் சுவாமி வேதாந்த தேசிகர்.

எனவே இத்தகையவர்களிடமிருந்து தள்ளியிருத்தலை தொடர்ந்தால் கர்மா (கொரோனா) விலிருந்து முழுவதுமாக நம்மை தற்காத்துக் கொளல்முடியும். உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்துக்கும் தூய்மை அவசியமன்றோ! இந்தத் தனிமை நமது ஆத்மாவின் இனிமையைத் தரட்டும்.

இது *Corono logical* இல்லை *Chronological – based on the advice by our Acharya Paramparai.* அதாவது நம் முன்னோரின் பழக்கங்களை மறுபடியும் பின்பற்றுவோம்.

◇◇◇◇◇◇◇

ஆச்சரம ஸ்வீகார திநம், ஸ்ரீமடம், சேலையூர்.

இந்த மாதம் உங்கள் நிலை

ஸ்ரீ .உ.வே. கௌசிகன் , ஆஸ்தான ஜோதிடர், ஸ்ரீமதஹோபில மேடம்.
Ph : 98840 90017

சார்வரி ஸ்ரீ வைகாசி மாதம் (14.5.20 முதல் 14.6.20 வரை)

சூரியன் ரிஷபத்தில் பிரவேசிக்கும் த்ருக் ரீதியாக துலா லக்னம் அமைகிறது. இரண்டு முக்கியமான க்ரஹம் தேவ குரு 4ல் நீசம். சூரியன் எட்டில் ஆட்சியில் உள்ளோருக்கு தொடர்ந்து சவால்களும், எதிர்ப்புகளும் இருந்துவரும் . சனி நான்கில் ஆட்சி பெற்றாலும் தினக் கூலி, மாத சம்பளம் பெறுபவர்களாக இருந்தாலும், பூர்ணத்ருப்தியுடன் இருக்க முடியாது. கட்டிட வேலைகள் பாதிக்கப்படும். மாணவர்கள், வித்தை விஷயமாக தடங்கல்கள் இருக்கும். நாட்டின் பொருளாதாரம் 29.06.20 வரை மந்த நிலையை சந்திக்கும். 24.5.20 வரை ஏற்படும் புத சுக்ர நெருக்கம் மழைக்கு வாய்ப்புண்டு. வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகமாகும்.

மேஷம் (அஸ்வினி, பரணி, க்ருத்திகை 2/4)

ராசிநாதன் செவ்வாய் 4ல் : குரு 10 ல் நீசம். பண வசதி சாதாரணம். கணினி துறையில் உள்ள சிலருக்கு முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தெரியும். வித்தையில் பலிதம் சுமார். புதிய முயற்சிகளை தவிர்ப்பது நன்று. சிலருக்கு கண் பல் உபாதை காட்டும் தொழில் அதிபர்களுக்கு தொழிலாளர் பிரச்னைகள் இருக்கும். ஸ்த்ரீகள், கலைஞர்கள் சற்றே முன்னேற்றம் காண்பர். கீழ்படிந்தோர், சக ஊழியர் தொல்லை தருவர். அரச ஊழியர்களில் சிலர் கட்டாய விடுப்பில் செல்ல நேரும். பஞ்சாயுத ஸ்தோத்ரம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (4.6.20 பகல் 1.06 முதல் 6.6.20 3.13 வரை). அனுகூலமான நாட்கள்: மே 14,15,20,21,25, ஜூன் 1,2,3,9,10,11,12

ரிஷபம் (க்ருத்திகை 3/4, ரோஹிணி , ம்ருகசீர்ஷம் 1/2)

ராசிநாதன் சுக்ரன் ராசியில் ஆட்சி. குரு பார்வை. பண வசதி பெருகும். சுப கார்யங்கள் முடியும். சிலருக்கு ஸந்தான பிராப்தி உண்டு. புதிய முயற்சிகளில் நல்ல திருப்பம் ஏற்படும். அரசு ஊழியர்களில் சிலருக்கு அனுகூலமான இடமாற்றம் கிடைக்கும். செவ்வாய் பத்தாமிடத்தில். ஆயுதங்கள், மின்சாதனங்கள் கையாள்வதில் உஷார் தேவை. கணினி

துறையில் உள்ள சிலருக்கு தேக்க நிலை நிலவும். வித்தையில் பலிதம் சுமார். சனி ஒன்பதில். பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோருடன் விவாதங்கள் தவிர்க்கவும். மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (6.6.20 பகல் 3.13 முதல் 8.6.20 இரவு 8.00 வரை). அனுகூலமான நாட்கள்: மே 15, 16,17, 18,23,27, ஜூன் 3,4,5,11,12,13,14.

மிதுனம் (ம்ருகசீர்ஷம் 1/2, திருவாதிரை, புனர்வசு 3/4)

ராசிநாதன் புதன் 12 மற்றும் ராசியில். வித்தையில் அதிக கவனம் தேவை. தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு குறைந்து காணும். குரு எட்டில். நிதி நிலைமை த்ருப்திகரமாய் இராது. களத்ரவகை சுகக் குறைவு காணும். அரசு ஊழியர்களில் சிலர் விருப்ப ஒய்வு பெறுவர். ஸந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். சூரியன் 12ல் சனி எட்டில் பிதாவகை அதிருப்தி நிலவும். பொதுப் பணிகளில் ஈடுபடவேண்டாம். செவ்வாய் 9ல் வீடு, நில விஷயங்களில் எதிர்பார்த்த பலன்கள் இராது. சகோதர வகை அதிருப்தி நிலவும். அபிதீஸ்தவம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (14.5.20 முதல் அன்று காலை 7.26 வரை. 8.6.2020 இரவு 8.00 முதல் 10/11.6.20 இரவு 3.43 வரை). அனுகூலமான நாட்கள்: மே 18, 19,20,21,25,30 ஜூன் 5,6,7,13,14

கடகம் (புனர்வஸு 1/4, பூசம், ஆயில்யம்)

ராசியை குரு பார்ப்பது நன்று. சனியும் பார்க்கிறார். மிஸ்ரமான பலன்கள். நிதி நிலைமை சமாளிக்கப்படும். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு குறைந்து காணும், களத்ரவகை சுகக் குறைவு காணும். அரசு ஊழியர்களில் சிலருக்கு அனுகூலமான இடமாற்றம் அமையும். விவாஹாதி சுபகார்யங்களில் நல்ல திருப்பம் ஏற்படும் செவ்வாய் எட்டில் சிலர் ஸ்திர சொத்துக்களை விற்பனை செய்வர். வாகனங்கள் ஓட்டுவதில் அதிக கவனம் தேவை. கணினி துறையில் உள்ள சிலருக்கு தேக்க நிலை நிலவும். வித்தையில் மேன்மை உண்டு. சூரியன் 15ல் பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு நன்கு அமையும். காமாஸிகாஷ்டகம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (14.5.20 இரவு 7.26 முதல் 17.5.20 காலை 7.16 வரை) (10/11.6.20 இரவு 3.47 முதல் 13.6.20 பகல் 2.43 வரை). அனுகூலமான நாட்கள்: மே 20,21,22, 27,28 ஜூன் 1,7,8,9

சிம்மம் (மகம் , பூரம், உத்திரம் 1/4)

குரு ஆறில் நீசம் . பண வசதி சாதாரணம். பூர்வீக சொத்துக்களை சிலர் விற்பனை செய்வீர். ஸந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். சூரியன் பத்தாமிடத்தில் ஆட்சி பெற்று சுக்ரனுடன் 24.5.20 வரை புதனும் பத்தாமிடத்தில் வித்தையில் மேன்மை உண்டு. கலைஞர்கள், ஸ்த்ரீகள் முன்னேற்றம் காண்பர். அரச ஊழியர்களில் சிலருக்கு சற்றே அனுகூலமான இடமாற்றம் கிடைக்கும். செவ்வாய் ஏழில் சிலருக்கு கண்ணில் உபாதை காட்டும். சனி ஆறில் தைரியமும் ஊக்கமும், குன்றாமல் எதையும் சமாளிக்கும் திறன் இருக்கும். மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (17.5.20 காலை 7.16 முதல் 19.5.20 இரவு 7.54 வரை) (13.6.20 பகல் 2.48 முதல் 14.6.20 வரை). அனுகூலமான நாட்கள்: மே 14,15,16,23,24,25,30 ஜூன் 3,10,11,12

கன்னி (உத்திரம் 3/4, ஹஸ்தம், சித்திரை 1/2)

ராசிநாதன் புதன் ஒன்பதில் சூரியன் பெற்ற சுக்ரன் ஸம்பந்தம் .24.5.20 முதல் புதன் பத்தாமிடத்தில் ஆட்சி, வித்தையில் மேன்மை உண்டு. வழக்கறிஞர்கள், கணக்காயர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரிகள் தங்கள் துறையில் மேலும் அபிவிருத்தி செய்ய வாய்ப்புகள் உண்டு. ராசியை குரு பார்ப்பது நன்று. நிதி நிலைமை திருப்தி தரும். சனி 5ல் ஆட்சி பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு ஸந்தான பிராப்தி உண்டு. செவ்வாய் ஆறில் நீதிமன்ற விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். கணினி துறையில் உள்ள சிலருக்கு எதிர்பாராத நற்பலன்கள் நடைபெறும். ஸ்ரீ ஆஞ்சநேயரை வணங்கவும். சந்த்ராஷ்டமம் (19.5.20 காலை 7.54 முதல் 22.5.20 காலை 7.35 வரை) அனுகூலமான நாட்கள்: மே 16, 17,18, 25,26,27,28 ஜூன் 1,5,12,13,14

துலாம்(சித்திரை 2/2, ஸ்வாதி, விசாகம் 3/4)

ராசிநாதன் சுக்ரன் எட்டில் ஆட்சி. சூரியனுடன் எட்டில். 24.5.20 வரை புதனும் எட்டில். பிதாவகை அதிருப்தி நிலவும். சிலருக்கு திடீர் பிரயாணங்கள் அமையும். வித்தையில் பலிதம் சுமார். உங்கள் திட்டங்களை நீங்களே நிறைவேற்றுங்கள். யாரையும் அதிகம் நம்பாதீர்கள். குரு நான்கில் நீசம். சனி நான்கில் ஆட்சி. நிதி நிலைமை சமாளிக்கப்படும். வீடு, வாகனாதி விஷயங்களில் புதிய செலவினங்கள் ஏற்படும். தாயாரின் உடல் நலம் சற்றே பாதிக்கப்படும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. அரசு ஊழியர்களில் சிலர் கட்டாய விடுப்பில் செல்ல நேரும். சந்த்ராஷ்டமம் (22.5.20 காலை 7.35 முதல்

24.5.20 மாலை 5.32 வரை) அனுகூலமான நாட்கள்: மே 18,19, 20,21, 27,28,29,30 ஜூன் 3,7,14

விருச்சிகம் (விசாகம் 1/4, அனுஷம், கேட்டை)

ராசிநாதன் செவ்வாய் நான்கில் தனகாரகன் குரு மூன்றில் நீசம். தனஸ் தானத்தில் கேது. நிதி நிலைமை த்ருப்திகரமாய் இராது. கணினி துறையில் உள்ள சிலருக்கு மந்த நிலை நிலவும். சிலருக்கு தவிர்க்க முடியாத காரணங்களால் ஜாகை மாற்ற நேரும். ஸந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். புதன் ஏழிலும், எட்டிலும் வித்தையில் பலிதம் சுமார். வியாபாரிகள் சரக்குகளை தேக்கி வைக்காமல் விற்பனை செய்வது நன்று. சனி மூன்றில் ஆட்சி. தைரியமும் ஊக்கமும் குன்றாது. தொழில் அதிபர்களுக்கு தொழிலாளர் பிரச்னைகள் தீர்க்கப்படும் . சூரியன், சுக்ரன் ஏழில் தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு இராது. சுந்தரகாண்ட பாராயணம் நன்று. சந்த்ராஷ்டமம் (27.5.20 மாலை 5.32 முதல் 27.5.20 காலை 1.28 வரை) அனுகூலமான நாட்கள்: மே 14,20,21, 23,30,31 ஜூன் 1,5,9

தனுசு (மூலம், பூராடம், உத்திராடம் 1/4)

ராசிநாதன் குரு இரண்டில் நீசம். சனி ஸம்மந்தம் குடும்பத்தில் பிரச்னைகள் இருக்கும். இருப்பினும் சமாளிக்கப்படும். நிதி நிலைமை சாதாரணம். அரசு ஊழியர்களில் சிலர் விருப்ப ஒய்வு பெற ஆயத்தம் செய்வர். ஸ்திர சொத்துக்களில் ஆதாயம் குறைந்து காணும். செவ்வாய் மூன்றில். தைர்யமும் ஊக்கமும் குன்றாமல் எதையும் சமாளிக்க முடியும். சூரியன் சுக்ரன் ஆறில் பெரியோர்கள் உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு இருக்கும். வித்தையில் பலிதம் சுமார். சனி இரண்டில். வாக்கின் நிதானம் தேவை. ஸ்ரீ ஆஞ்சநேயரை வணங்கவும். சந்த்ராஷ்டமம் (26/27.5.20 இரவு 1.28 முதல் 29.5.20 காலை 6.59 வரை)அனுகூலமான நாட்கள்: மே 15,16,23,24,25 ஜூன் 1,2,3,7,11,12.

மகரம் (உத்திராடம் 3/4, திருவோணம், அவிட்டம் 1/2)

ராசிநாதன் சனி ராசியில் குருவும் ராசியில் நீசம். ஏழரைச் சனி. ராசிநாதன் அதிக பாதகம் இராது. பணவசதி சாதாரணம். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நன்று. அரசு

ஊழியர்களில் சிலருக்கு இடமாற்றமும், சிலர் விடுப்பில் செல்லவும் நேரும். செவ்வாய் இரண்டில். சிலருக்கு கிஸ்ணனில் உபாதை காட்டும். கணினி துறையில் உள்ள சிலருக்கு அதிருப்திகரமான சூழ்நிலை நிலவும். புதன் 5, மற்றும் ஆறில் . வித்தையில் அதிக கவனம் தேவை. சூரியன் சுக்ரன் 5ல் . பூர்வீக சொத்துக்களில் வில்லங்கம் ஏற்படும். இருப்பினும் சுமூகமாக முடியும். தசாவதார ஸ்தோத்ரம் நலம் தரும்.சந்த்ராஷ்டமம் (29.5.20 காலை 6.59 முதல் 31.5.20 காலை 10.18 வரை)அனுகூலமான நாட்கள்: மே 18,25,26,27,28 ஜூன் 3,4,5,9,10,14

கும்பம் (அவிட்டம் 2/2, சதயம், பூரட்டாதி 3/4)

ராசிநாதன் சூரி 12ல் ஆட்சி. 71/2ச் சனி ஆரம்பகாலம் . குருவும் 12ல் ஆட்சி. சிலர் தொழில் ரீதியாக குடும்பத்தை விட்டு பிரிந்திருக்க நேரும். பண வசதி சாதாரணம். செலவினங்கள் குறையாது. புதிய முயற்சிகளை தள்ளி போடுவது நன்று. செவ்வாய் ராசியில் சகோதரவகை அதிருப்தி நிலவும். கணினி துறையில் உள்ள சிலருக்கு புதிய வேலை மாறும் எண்ணம் அதிகமாகும். புதன், 4 மற்றும் 5 ல் வித்தையில் பலிதம் சுமார். சூரியன், சுக்ரன் நான்கில் சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் எண்ணம் அதிகமாகும். குடும்பத்தில் சுபகார்யங்கள் நடைபெறும். மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் நலம் தரும். சந்த்ராஷ்டமம் (31.5.20 காலை 10.18 முதல் 2.6.20 பகல் 12.01 வரை). அனுகூலமான நாட்கள்: மே 15,16,20,21,27,28,29,30 ஜூன் 5,6,7,12

மீனம் (பூரட்டாதி 1/4, உத்திரட்டாதி, ரேவதி)

ராசிநாதன் குரு 11ல் நீசம். சனி 11ல் ஆட்சி. நிதிநிலைமை நன்கு அமையும். சேமிப்பது கடினம். கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் நற்செய்திகள் வாழ்வு வளம் பெற அமையும். சிலருக்கு ஸந்தான ப்ராப்தி உண்டு. தொழிலில் முன்னேற்றம் உண்டு. அரசு ஊழியர்களுக்கு அனுகூலமான இடமாற்றம், பதவி/சம்பள உயர்வு கிடைக்கும். செவ்வாய் 12ல் குடும்பத்தில் பிரச்னைகள் தோன்றும். சகோதரவகை அதிருப்தி நிலவும். புதன் மூன்று மற்றும் நான்கில். கணக்காயர்கள். கமிஷன் ஏஜென்டுகள் முன்னேற்றம் காண்பர். சூரியன் மூன்றில். தைர்யமும் ஊக்கமும் குன்றாது.ஸ்ரீ சக்ரத்தாழ்வார் வணங்கவும். சந்த்ராஷ்டமம் (2.6.20 பகல் 12.01 முதல் 4.6.20 பகல் 1.06 வரை). அனுகூலமான நாட்கள்: மே 18,23,30,31 ஜூன் 1,7,8,9,14

செம்பூர், ஸ்ரீமடம் ந்ருஸிம்ஹ ஜயந்தீ

37ம் பட்ட ஸ்ரீமதழகியசிங்கரின் 175 திருநக்ஷத்ரம்

ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின் பேரில் 37ம் பட்டம் பிள்ளைப்பாக்கம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகனின் 175வது திருநக்ஷத்ரம் விகாரி மாசி 23 மார்ச் 6ம் தேதி வெள்ளிக்கிழமை புஷ்ய நக்ஷத்ரத்தில் ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் அர்ச்சா மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் 37ம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியில் வேத திவ்ய ப்ரபந்த பாராயணங்களுடன் நன்றாக நடந்தேறியது. ஸ்ரீவீரராகவன், ஸ்ரீபாஷ்யகாரர் மரியாதைகளுடன் கூடவே நடந்தது. திருவள்ளூர் ஸ்ரீவீரராகவன் ஸந்நிதியிலிருந்து முத்ரகர்த்தா ஸ்ரீ உ.வே. பேரமல்லூர் ஜநார்த்தனன் ஸ்வாமி, ப்ரதான அர்ச்சகர் ஸ்ரீ உ.வே. புரிசை வங்கீபுரம் ஸ்ரீதராசார்யர் ஸ்வாமி, ஸ்தானீகர் கொடியாலம் வாஸுதேவாசார்யர் ஸ்வாமி, திருவள்ளூர் அஹோபிலமடம் ஆராதகர் ஸ்ரீ உ.வே. பேரங்கியூர் ஸ்ரீநிவாஸராகவாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீமடம் மானேஜர் பாண்டுர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி ஆகியோர் வந்திருந்து இவ்வுத்ஸவத்தை நடத்திக் கொடுத்தனர்.

சென்னையிலிருந்து வேத விற்பன்னர்கள் அநேகர் வந்திருந்தனர். பெருங்களத்தூரில் வசிக்கும் ஸ்ரீமான் பிள்ளைப்பாக்கம் ஸ்ரீராமனும், வில்லிவாக்கத்தில் வசிக்கும் ஸ்ரீ உ.வே. பிள்ளைப்பாக்கம் வாஸுதேவாசார்யர் ஸ்வாமியும், இதனை உபாயமாக ஏற்றுக் கொண்டார்கள். தளிகை மிக ருசியாகவும் எல்லோரும் போற்றும்படியும் இருந்தது. நிறைய ஆஸ்திகர்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீபெரும்புதூர் மடம் ஆராதகர் ஸ்ரீ உ.வே. கண்ணன், காரியஸ்தர் ஸ்ரீ உ.வே. பாலாஜி ஆகியோர் ஸகல ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தனர். எல்லாம் நன்றாக நடைபெற்றதைக் கேள்வியுற்று ஸ்ரீமதழகியசிங்கர் சந்தோஷப்பட்டாயிற்று.

எவ்வுள்ளூரான்